# சைவ நெறி

# தரம்

# 5

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

*முதலாம் பதிப்பு* - 2019

*பதிப்புரிமையுடையது.*

ISBN 978-955-25-0059-6

**சைவநெறிப் பாடநூல் கல்விச் சபை மற்றும் இந்துசமய ஆலோசனைச் சபையின் ஆலோசனைகள் பெறப்பட்டு வெளியிடப்படுகின்றது.**

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
வரையறுக்கப்பட்ட எம். டி குணசேன பிரின்டர்ஸ் பிரைவட் லிமிடட்
இல 20, சென் செபஸ்டியன் மேடு, கொழும்பு 12 இல் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி


கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

## முன்னுரை

நாளுக்கு நாள் உலகம் புதிதாகின்றது. மாற்றமுறுகின்றது. அதை சரியாகப் புரிந்து கொண்டு காணப்படக்கூடிய நல்லவற்றை பாதுகாப்பதற்கும் மாற்றமுறும் உலக சவால்களைப் பலமாக எதிர்கொள்வதற்கும் கற்றலானது உங்களுக்கு வழிகாட்டுகின்றது. ஒருவருக்கொருவர் நட்புடன் செயற்பட்டு சூழலுக்கும் வேலையுலகிற்கும் பொருந்துமாறு ஓய்வினைப் பயனுள்ளதாகக் கழித்து சமநிலை ஆளுமை கொண்டதொரு பிரசையாவதற்குத் தேவையான திறன்களை உங்களுக்குப் பெற்றுத்தருவதே எமது இலக்காகும்.

உள்நாட்டில் போன்றே சர்வதேசத்துடனும் சிறந்த தொடர்புகளைக் கட்டியெழுப்பக்கூடிய சமநிலை ஆளுமை கொண்ட ஒருவராவதற்கு உங்களுக்குத் துணைக்கரமான கற்றல் சாதன உற்பத்திக்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

2016 ஆம் ஆண்டுமுதல் நடைமுறைப்படுத்தப்படுகின்ற புதிய பாடத்திட்டத்தின் கீழ் தரம் 1 முதல் தரம் 4 வரை அண்ணளவாக 25 வகையான பாடநூல்கள் இது வரைக்கும் உங்கள் கைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அரசினால் இலவசமாக வழங்கப்படுகின்ற இப்பாடநூல்கள் மூலம் மிக உயர்ந்தமட்டப் பயன்களைப் பெற்றுக் கொள்வதுடன் அவற்றை உங்கள் கண்களைப் போன்று பாதுகாப்பதும் உங்கள் கடமையென்பதை நினைவூட்டுகின்றேன். புதிய பாடத் திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டுக்காக அறிமுகப்படுத்தப்படுகின்ற இப்புதிய பாடநூல்களை நன்கு கற்று அதில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மூலம் உங்கள் திறன்களையும் செயலாக்கத்தையும் வளர்த்துக்கொண்டு கௌரவத்துடன் எதிர்கால உலகில் நுழைவதற்கு உங்களை வாழ்த்துகின்றேன்.

இந்நூலை உங்கள் கைகளில் தருவதற்கு உழைத்த எழுத்தாளர் மற்றும் பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

**டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**

ஆணையாளர் (அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## இணைப்பாக்கம்

**சி. காண்டீபன்**

அபிவிருத்தி அலுவலர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## பதிப்பாசிரியர் குழு

**கலாநிதி க. இரகுபரன்**

சிரேஷ்ட விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்.

**எஸ். லலிதாம்பிகை**

பிரதிக் கல்விப் பணிப்பாளர்
கல்வி அமைச்சு.

**கலாநிதி உ. நவரட்ணம்**

பணிப்பாளர் (ஓய்வு)
தமிழ் மொழிப் பிரிவு
தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

**வீ. என். எஸ். உதயசந்திரன்**

சிரேஷ்ட விரிவுரையாளர்
முன் பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

## நூலாக்கக் குழு

**சோ. பாலசுந்தரம்**

பிரதிப் பரீட்சை ஆணையாளர் (ஓய்வு)

**வானதி காண்டீபன்**

முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.

**வாஹினி ஸ்ரீதரன்**

ஆசிரியர்
திருக்குடும்பக் கன்னியர் மடம், பம்பலப்பிட்டி.

**பொன்னுத்துரைக் குருக்கள் சிவசர்மா**

ஆசிரிய ஆலோசகர்
வலயக் கல்விக் காரியாலயம்
திருக்கோவில்.

**காந்திமதி சங்கரநாதன்**

ஆசிரியர்
விபுலாநந்தாக் கல்லூரி
வவுனியா.

**ஜே. சுதர்ஷினி**

ஆசிரியர்
சைவ மங்கையர் வித்தியாலயம்
கொழும்பு - 6

## பதிப்பாசிரியர் - மொழி

**எஸ். வடிவேல்**

ஆசிரியர்
இ/ இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம், இரத்தினபுரி.

## சரவை நோக்கு

**இ. மகேந்திரன்**

ஆசிரியர்
நோவூட் தமிழ் மகா வித்தியாலயம், நோவூட்.

## சித்திரம்

**சி. பெ. முரளி**

வலயக் கல்விக் காரியாலயம்
கம்பளை.

## முகப்பு வடிவமைப்பு

**திரு சத்திவேல் சத்திய சீலன்**

கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## நூல் வடிவமைப்பு

**சத்திவேல் சத்திய சீலன்**

கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**தர்மகுலேந்திரன் சசிரேகா**

கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | விநாயகர் | 01 |
| 2 | கடவுள் | 05 |
| 3 | தடாதகைப் பிராட்டியார் | 08 |
| 4 | கச்சியப்பருக்கு அருளிய கந்தன் | 12 |
| 5 | துயர் துடைத்த கண்ணன் | 15 |
| 6 | சித்திரைப் புத்தாண்டு | 20 |
| 7 | சிவசின்னங்கள் | 25 |

8 பூசலார் நாயனார் 32

9 ஆலய வழிபாடு 36

10 முன்னேஸ்வரம் 41

11 பஞ்சபுராணம் 44

12 இளையான்குடி மாற நாயனார் 49

13 சரியைத் தொண்டு 53

14 சைவ வாழ்வு 58

15 பாணபத்திரன் 65

| | | |
|---|---|---|
| 16 | கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் | 71 |
| 17 | குருபூசை | 74 |
| 18 | குமரகுருபர சுவாமிகள் | 77 |
| 19 | இயற்கையில் இறைவன் | 82 |
| 20 | அப்பூதியடிகள் | 89 |
| 21 | சைவ நற்பண்புகள் | 94 |
| 22 | மங்கையர்க்கரசியார் | 99 |
| 23 | நல்வழி | 104 |

உ

சிவமயம்

# கடவுள் வணக்கம்

*திருச்சிற்றம்பலம்*

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா! சுடர் விட்டுளன் எங்கள் சோதி!
மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம் பற்றி வாழ்மின்!
சாதுக்கள் மீக்கீர், இறையே வந்து சார்மின்களே!

*திருச்சிற்றம்பலம்*

# 1 விநாயகர்

எமது சமயத்தின் முதல் நூலாக அமைவன வேதங்கள். வியாச முனிவர் அந்த வேதங்களை நான்காக வகுத்தார்; அதனால் வேதவியாசர் என்றே பெயர் பெற்றார்.

வேதங்கள், கற்றறிந்த பெரியவர்களாலேயே விளங்கிக் கொள்ளத்தக் கவை. வேத உண்மைகளைச் சாதாரண மக்களும் விளங்கிக்கொள்ளக் கூடிய வகையிலே, கதைவடிவிலே எடுத்துரைப்பன புராணங்கள். அப்புராணங் களையும் வேதங்களைப் போலவே ஒழுங்குபடுத்தி, உலகுக்கு உதவவேண்டும் என எண்ணினார் வேதவியாசர்.

வேதவியாசர், சனற்குமார முனிவரிடம் சென்று பதினெண் புராணங் களையும் கேட்டறிந்தார். அவற்றை எளிமையான மொழிநடையிலே, சுலோக வடிவிலே பாடுவதற்கு ஆயத்தமானார். அவரால் முடியவில்லை! என்ன ஆச்சரியம்! வேத வேதாங்கங்களையெல்லாம் எவரிடத்தும் சென்று கற்காமல் தாமாகவே ஓதியுணர்ந்த வேதவியாசரால், இப்போது ஒரு சுலோகத்தைக்கூடப் பாட முடியவில்லையே!

வியாசமுனிவர் மனம் கலங்கினார். தன்னால் புராணக்கதைகளைச் சுலோக வடிவிலே பாடுவதற்கு முடியாமற் போனதற்கான காரணத்தை அவரால் உணர முடியவில்லை; பிரமதேவரிடம் சென்று முறையிட்டார்:

''பிரமதேவரே, புராணக் கதைகளைப் பாமரரும் படித்து மெய் உணர்ந்து உய்வுபெறவேண்டும் என்னும் நோக்கத்தால், அவற்றை எளிய முறையிலே சுலோக வடிவிலே பாடி உலகுக்கு அளிக்க ஆசைப்பட்டேன். ஆனால் என்னால் ஒரு சுலோகத்தைத்தானும் பாடமுடியவில்லையே! என் அறிவு தேய்ந்து விட்டதா? ஆற்றல் அகன்றுவிட்டதா? இது என்ன சோதனை!''

பிரமதேவர் சிந்தனையில் ஆழ்ந்தார்; சிறிது நேரம் மனதை ஒரு நிலைப்படுத்தித் தியானித்தார்; ஞான திருஷ்டியால் உண்மையை உணர்ந்து கொண்டார்; வியாசரை நோக்கிக் கூறலானார்:

''வியாசனே, தனக்குமேல் நாயகர் எவருமில்லாதவராதலால் விநாயகர் என்றும், நமக்கு வரும் விக்கினங்கள் யாவற்றையும் போக்கியருளுபவர் ஆதலால் விக்கினேஸ்வரர் என்றும் போற்றப்படுகின்ற ஆனைமுகக் கடவுளைத் தியானிக்காது, உனது காரியத்தைத் தொடங்கினாய். வேதம் அறிந்தவன் என்ற வித்தியாகர்வத்தினால் தெய்வத்தை நினையாது தொடங்கிய வினை எவ்வாறு சித்திபெறும்? விநாயகக் கடவுளை வணங்கிக் காரியத்தைத் தொடங்கு! எல்லாம் இனிதே நிறைவேறும்!''

வேதவியாசர் உண்மையை ஐயம் அற உணர்ந்து கொண்டார். விநாயகக் கடவுளை வணங்கி, புராணக்கதைகளைச் சுலோக வடிவிலே பாடும் பெரும் பணியை இனிதே நிறைவேற்றினார்.

நாமும் எந்தக் காரியத்தைத் தொடங்கும்போதும் விநாயகரை வழிபட்டே தொடங்குகிறோம். எதை எழுதும்போதும் பிள்ளையார் சுழி இட்டே எழுதத் தொடங்குகிறோம்.

திருச்சிற்றம்பலம்

**பிடியதன் உரு உமை கொள மிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்**
**கடி கணபதி வர அருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில் வலிவலமுறை இறையே**

திருச்சிற்றம்பலம்

## விநாயகனே வெவ்வினையை
## வேரறுக்க வல்லான்!

| | |
|---|---|
| வித்யா கர்வம் | கல்வியால் உண்டாகும் ஆணவம் |
| வேதாங்கங்கள் | வேதத்தின் பிரிவுகள்/அங்கங்கள் |
| திருஷ்டி | பார்வை |

### பயிற்சி

**தொடர்புபடுத்துவோம்.**

| | |
|---|---|
| 1. எமது சமயத்தின் முதல் நூல் | விநாயகர் |
| 2. விக்கினங்களைப் போக்கியருளுபவர் | வேதங்கள் |
| 3. வேதங்களை வகுத்தவர் | விக்கினேஸ்வரர் |
| 4. தனக்கு மேல் தலைவன் இல்லாதவர் | திருஞானசம்பந்தர் |
| 5. பிடியதன் உருவுமை... | வியாசர் |

**இடைவெளி நிரப்புவோம்.**

1. நாம் எழுதத் தொடங்கும் முன்னர் ______________________ இட்டுத் தொடங்க வேண்டும்.
2. வியாசர் ______________________ கர்வத்தினால் பிள்ளையாரை மறந்தார்.
3. வியாசர் புராணக்கதைகளை ______________________ வடிவில் பாட முயன்றார்.
4. வியாசரால் பாடமுடியாமற் போனதற்காக காரணத்தை ______________ ஞானதிருஷ்டியால் விளங்கிக் கொண்டார்.
5. வேதவியாசர் சனற்குமார முனிவனிடம் சென்று ______________________ கேட்டறிந்தார்.

## செயற்பாடு

''பிடியதன் உரு உமை...'' தேவாரத்தைப் பண்ணுடன் ஓதுவோம்.

# 2 கடவுள்



கடவுள் ஒருவரே. உலகத்தில் உள்ள பொருள்கள் யாவிலும் அவரே மேலான பொருள். அதனால் கடவுளைப் பரம்பொருள் என்கிறோம். அவரையே நாம் சிவன் - சிவபிரான் என்கிறோம்.

கடவுள் எல்லா உயிர்களுக்குள்ளும் உயிராக இருக்கிறார்; எல்லா உலகத்திலும் இருக்கிறார்; அவை எல்லாவற்றையும் கடந்து அவற்றுக்கு அப்பாலும் இருக்கிறார்.

அவரே எல்லாவற்றையும் இயக்குபவர்; எல்லாம் அறிந்தவர்; எல்லாம் வல்லவர்.

கடவுள் எந்த உருவமும் அற்றவர்; ஆயினும் எந்த உருவத்தில் நினைந்து வழிபடினும் அந்தந்த உருவில் நின்று அருள்புரிபவர். அவரை எம்முடைய அறிவுகொண்டு இப்படிப்பட்டவர் என்று பூரணமாக அறிந்துகொள்ள முடியாது. அவர் எம் அறிவுக்கு அப்பாற்பட்டவர். ஆனாலும் எம் அன்புக்கு ஆட்பட்டு எமக்கு வேண்டியவற்றைத் தந்தருளுபவர்.

கோயில்களில் நாம் இறைவனைப் பல்வேறு வடிவங்களில் வழிபடு கிறோம். ஒரு நாமமும் இல்லாத அவரை நாம் பல நாமங்களில் வழிபடுகிறோம். அந்த வடிவங்களும் நாமங்களும் கடவுளுடைய இயல்புகளை உணர்த்துவன வாகும்.

கடவுள் விருப்பு, வெறுப்பு அற்றவர்; எந்தத் தேவையும் அற்றவர். ஆயினும் உயிர்கள்மீது கொண்ட பெரும் கருணையினாலே, அவை ஈடேறு வதற்காக படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்தருளுகிறார்.

கடவுளை வழிபடுவதற்கு நமது சமயம் பல வழிமுறைகளைக் காட்டியுள்ளது. அவற்றுள் நமக்குப் பொருத்தமான வழியில் நாம் இறைவனை வழிபடலாம். அறத்திலிருந்து விலகாமல் வாழ்வதே எல்லாவற்றிலும் மேலான இறைவழிபாடாகும்.

**அவனின்றி ஓர் அணுவும் அசையாது**

## பயிற்சி

**சரியானால் சரி எனவும் பிழையானால் பிழை எனவும் எழுதுவோம்.**

1. கடவுள் எந்த உருவமும் அற்றவர்.
2. நாம் இறைவனைப் பல்வேறு வடிவங்களில் வழிபடுகிறோம்.
3. கடவுள் விருப்பு, வெறுப்பு உடையவர்.
4. அறத்தோடு வாழ்வதே மேலான இறைவழிபாடாகும்.
5. எமது அறிவால் இறைவனைப் பூரணமாக அறிந்து கொள்ள முடியும்.

**விடை எழுதுவோம்.**

1. இறைவனின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. இறைவன் நிகழ்த்தும் ஐந்தொழில்களும் எவை?
3. இறைவன் ஐந்தொழில்களையும் நிகழ்த்துவதற்கான காரணம் யாது?

## செயற்பாடு

சிவபெருமானின் பல்வேறு நாமங்களையும் வேறுபட்ட திருவுருவப் படங்களையும் காட்சிப்படுத்துவோம்.

# 3 தடாதகைப் பிராட்டியார்

பாண்டிய நாட்டை மலையத்துவசன் எனும் மன்னன் ஆண்டுவந்தான். அவனது மனைவி காஞ்சனமாலை. இருவரும் சிவபக்தியில் சிறந்தவர்கள். இவர்களுக்கு எல்லாச் செல்வமும் இருந்தும், குழந்தை இல்லாதது பெருங் குறையாக இருந்தது. இதனால், மலையத்துவச மன்னன், குழந்தை வரம் வேண்டி, சிவபெருமானை நோக்கி யாகம் செய்தான். சிவனருளால், உமாதேவியார் அழகிய பெண் குழந்தையாகத் தோன்றினார்.



மன்னன் அளவிலா ஆனந்தம் அடைந்தான். காஞ்சனமாலை அக் குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். குழந்தைக்குத் தடாதகை என்று பெயரிட்டனர்.

தடாதகை, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தாள். அவளுக்கு, அரசகுமாரர்களுக்குரிய யானையேற்றம், குதிரையேற்றம், விற்போர், வாட்போர் முதலான பயிற்சிகளையெல்லாம் மன்னன் வழங்கினான்.

தடாதகைக்கு உரிய பருவம் வந்ததும், மலையத்துவசன் அவளுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தான். நாட்டை ஆளும் பொறுப்பைத் தடாதகை ஏற்றாள். சிறிது காலத்தில் மன்னன் சிவபதமடைந்தான். தடாதகை நாடுகள் பலவற்றுக்கும் திக்குவிஜயம் மேற்கொண்டாள்; அந்நாட்டு மன்னர் அனைவரையும் வெற்றிகொண்டாள்; ஈற்றில் கைலைமலையைக் கைப்பற்றச் சென்றாள்.



கைலை, சிவபெருமான் வீற்றிருந்து அருளாட்சிபுரியும் இடம் அல்லவா! அங்கு சிவபெருமான் இடப வாகனத்தில் காட்சியளித்தார். போர்க்கோலம் பூண்டு வந்திருக்கும் தடாதகையைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். அக்கணத்திலே தடாதகை தலைவனைக் கண்ட தலைவியாக நாணத்தால் தலை குனிந்தாள்; தனது முற்பிறப்பை உணர்ந்து கொண்டாள்; போர்க்கோலம் நீங்கிப் பாண்டிநாடு மீண்டாள்.


அதன்பின் சிவபெருமான், மதுரைக்கு வந்தார்; தடாதகைப் பிராட்டியாரைத் திருமணம் செய்துகொண்டார்; பாண்டி நாட்டு அரசாட்சியை ஏற்றுக் கொண்டார்.

சிவபெருமான் சோமசுந்தர பாண்டியனாகவும், தடாதகை மீனாட்சி அம்மையாகவும் விளங்கினர். இவர்களுடைய ஆட்சியில் மக்கள் எல்லாச் சிறப்புக்களையும் பெற்று மகிழ்ந்தனர்; இருவரையும் போற்றி வணங்கினர். இறைவனும் இறைவியும் இன்றும் அருளாட்சி புரியும் இடமாக மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் விளங்குகிறது.

**அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த**
**ஆலவாய் ஆவதும் இதுவே!**

## பயிற்சி

**சொற்கோபுரத்தைப் பூர்த்தி செய்வோம்.**



1. மன்னனைக் குறிக்கும் ஒரு சொல்.
2. சிவன் வீற்றிருந்து அருள்புரியும் இடம்.
3. பாண்டியன் குழந்தைவரம் வேண்டிச் செய்தது.
4. மலையத்துவசன் மகள்.
5. தடாதகையின் நாடு.
6. சுந்தரபாண்டியனாக வடிவெடுத்து மதுரைக்கு வந்தவர்.

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. தடாதகைப் பிராட்டியாகத் தோன்றியவர் யார்?
2. சிவபெருமானின் வாகனம் யாது?
3. மதுரையில் விளங்கும் ஆலயத்தின் பெயர் யாது?

## செயற்பாடு

தடாதகைப் பிராட்டியார் கதையை நாடகமாக நடித்துக் காட்டுவோம்.

# 4 கச்சியப்பருக்கு அருளிய கந்தன்



கச்சியப்ப சிவாசாரியார், முருகப் பெருமான்மீது மிகுந்த பக்தி உடையவர். முருகனைத் தினமும் அன்புடன் பூசிப்பவர்.

ஒருநாள் அவர் உறங்கிக் கொண்டிருந்தபோது, முருகப் பெருமான் அவரது கனவிலே தோன்றினார்; ''என் வரலாற்றைக் காவியமாகப் பாடு'' என்று பணித்தார். ''முருகா! அவ்வளவு ஆற்றல் எனக்கு ஏது?'' என்று தயங்கினார் கச்சியப்பர். ''**திகடசக்கரம்** என்று தொடங்கிப் பாடு'' என்று சொல்லி மறைந்தார் முருகப்பெருமான்.

'திகடசக்கரம்' என்ற தொடரைத் தொடக்கமாகக் கொண்டு கச்சியப்பர் கந்தபுராணத்தைப் பாடத் தொடங்கினார். சில பாடல்களை எழுதி, முருகனது திருவடியில் வைத்துவிட்டு வீடு சென்றார். மறுநாள் வந்து ஏட்டைப் பிரித்துப் பார்த்தார். அதிலே சில திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன. அதனைக் கண்டு கச்சியப்பர் மெய்சிலிர்த்தார். தொடர்ந்தும் இப்படியே கச்சியப்பர் பாட்டுக் களை எழுதி வைப்பதும் முருகன் திருத்தங்கள் செய்வதுமாக கந்தபுராணம் பூர்த் தியானது. கச்சியப்பர், அதனை அறிஞர் சபையில் அரங்கேற்ற விரும்பினார்; அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

அரங்கேற்ற நாளும் வந்தது. அவையில் பலரும் கூடியிருந்தனர். கச்சியப்பர் 'திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்' என்று தொடங்கும் முதற் பாடலைப் பாடி, அதற்குரிய பொருளையும் விளக்கத் தொடங்கினார். அப்போது அவையில் இருந்த ஒரு புலவர் எழுந்து, ''கச்சியப்பரே நிறுத்தும்! திகடசக்கரம் என்பது இலக்கணப் பிழையானது'' என்றார்.

அதற்குக் கச்சியப்பர், ''இது முருகப் பெருமான் தந்த வாக்கு, இதனை எப்படி மறுப்பது?'' எனக் கேட்டார். அதற்கு அப்புலவர், ''முருகனே கொடுத்த அடியானாலும், பிழை பிழை தான்!'' என்றார். அவையில் சலசலப்பு ஏற்பட்டது. மறுநாளுக்கு அவை ஒத்தி வைக்கப்பட்டது. அன்றிரவு கச்சியப்பரால் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியவில்லை. ''முருகா! இதற்கு ஒரு வழி கூறு'' என்று மனமுருகிப் பிரார்த்தனை செய்தார்.

அடுத்தநாள் மீண்டும் அவை கூடியது. அப்போது, முதல்நாள் குற்றம் கண்ட புலவர், ''கச்சியப்பரே! நான் கேட்ட வினாவிற்கு இன்று உம்மால் பதில் கூற முடியுமா?'' என்று கேட்டார். அவ்வேளை கையில் ஒரு நூலுடன் புலவர் ஒருவர் வந்தார். ''புலவரே! உமது கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன். 'திகட சக்கரம்' என்ற அடியில் இலக்கணப் பிழை இல்லை. இதோ 'வீரசோழியம்'. இந்த இலக்கணநூல் இதற்குச் சான்று பகரும்'' என்று கூறி நூலை அவையில் சமர்ப்பித்தார். அவையினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

''யார் இந்தப் புலவர், எங்கிருந்து வந்தார்?'' என அறிய அனைவரும் ஆவல் கொண்டனர். ஆனால் புலவரைக் காணவில்லை! புலவராக வந்தவர் முருகப் பெருமானே என்ற உண்மையை யாவரும் உணர்ந்து வியந்தனர். கச்சியப்பர், கந்தபுராணப் பாடல்கள் அனைத்தையும் ஓராண்டு காலமாக அவையில் பாடியும் விளக்கியும் அரங்கேற்றினார். கந்தபுராணத்தினூடாக கச்சியப்பர் எம்மிடையே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

**கந்தவேள் புராணம் தன்னைக்**
**காதலித்து ஓதுவோமே!**

## பயிற்சி

**பின்வரும் கூற்றுக்கள் யாரால், யாருக்கு கூறப்பட்டன என்று எழுதுவோம்.**

1. ''என் வரலாற்றைக் காவியமாகப் பாடு''

   யாரால் :- ____________ யாருக்கு :- ____________

2. ''திகடசக்கரம் என்பது இலக்கணப் பிழையானது''

   யாரால் :- ____________ யாருக்கு :- ____________

3. ''இது முருகப் பெருமான் முதலடியாகத் தந்த வாக்கு''

   யாரால் :- ____________ யாருக்கு :- ____________

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. முருகப் பெருமானின் வரலாற்றைக் காவியமாகக் கூறும் நூல் யாது?
2. அதனை இயற்றியவர் யார்?
3. அவருக்கு முருகப்பெருமான் எடுத்துக் கொடுத்த முதலடி யாது?
4. நூல் அரங்கேற்றம் தடைப்பட்டதன் காரணம் யாது?
5. 'வீரசோழியம்' என்ற நூலுடன் புலவராக அவைக்கு வந்தவர் யார்?

## செயற்பாடு

முருகக் கடவுள் பற்றிய பேச்சு ஒன்றை நிகழ்த்துவோம்.

# 5 துயர் துடைத்த கண்ணன்



கண்ணனும் குசேலரும் சிறுவயதில் ஒன்றாக ஒரே குருகுலத்தில் கல்வி கற்றவர்கள்; நெருங்கிய நண்பர்கள்.

குருகுலக்கல்வி நிறைவடைந்த பின், கண்ணன் துவாரகையின் அரசனானான். குசேலர், அவந்தி நகரத்தில் சுசீலை எனும் பெண்ணைத் திருமணம் செய்து இனிமையாக இல்லறம் நடாத்திவந்தார். இறையருளால் அவர்களுக்கு இருபத்தேழு குழந்தைகள் பிறந்தன.

வறுமை அக்குடும்பத்தை வாட்டியது. பிள்ளைகளுக்குப் போதிய உணவு கிடைக்கவில்லை. பிறரிடம் உதவி பெறவும் குசேலர் விரும்பவில்லை. பிள்ளைகள் படும் துன்பத்தைக் கண்டு, கண்ணீர் சொரிந்த சுசீலை, கணவனிடம், ''நாம் உணவின்றி இருக்கலாம், எமது குழந்தைகள் உணவின்றித் தவிக்கலாமா?'' என்று துயரத்துடன் வினவினாள். அதற்குக் குசேலர், ''நான் வறுமையால் இறப்பினும், யாரிடமும் கையேந்தி நிற்க மாட்டேன்'' என்று உறுதியாகக் கூறினார். அதைக் கேட்ட சுசீலை, ''நீங்கள் யாரிடமும் கையேந்த வேண்டாம். உங்கள் ஆருயிர்த் தோழனும் துவாரகையின் அரசனுமான கண்ணனிடம் சென்று உதவி கேட்கலாமே!'' என்றாள்.

குசேலர் தயங்கினார். அப்போது சுசீலை ''உற்ற நண்பனிடம் உதவி கேட்பதில் தவறேதும் இல்லை'' என உரைத்தாள். குசேலர் மனம் தெளிந்தார்; நண்பனிடம் செல்ல ஆயத்தமானார். ''வெறுங்கையுடன் எப்படிச் செல்வது? கண்ணனுக்குக் கொடுப்பதற்கு ஏதாவது உண்டா?'' என்று கேட்டார்.

நல்லகாலமாக வீட்டில் சொற்ப அவல் இருந்தது. சுசீலை தன் கைவண்ணத்தால் அதைச் சுவையாகப் பாகம் செய்து, துணியொன்றில் முடிந்து கணவனிடம் கொடுத்தாள். குசேலரும் அவல் முடிச்சை மடியில் பத்திரமாக வைத்துக் கொண்டார்; துவாரகை நோக்கிப் புறப்பட்டார்.

குசேலர், காடு மலையெல்லாம் கடந்து சென்றார். கல்லும் முள்ளும் காலை வருத்தின. உடல் களைப்பினால் சோர்ந்தது. எதனையும் பொருட்படுத்தாது, நண்பனைக் காணும் ஆவலில், ஒருவாறு துவாரகையை அடைந்தார் குசேலர்.

குசேலரின் கந்தலாடையையும், வாடிய தோற்றத்தையும் கண்ட அரண்மனைக் காவலர்கள் அவரை உள்ளே செல்லவிடாது தடுத்து நிறுத்தினர். குசேலர் அவர்களிடம், ''எனது பெயர் குசேலன்; நான் அவந்தி எனும் நகரிலிருந்து வருகிறேன்; கண்ணன் எனது பள்ளித் தோழன்'' என்று பணிவுடன் கூறினார். காவலர்கள் அதனை நம்ப மறுத்தனர். எனினும், கண்ணனிடம் சென்று, செய்தியை உரைத்தனர்.

அதனைக் கேட்ட கண்ணன் மிகவும் மகிழ்ந்தான்; ''விரைந்து சென்று அவரை அழைத்து வாருங்கள்'' என்று காவலரிடம் கட்டளையிட்டான். குசேலர்

வருவதற்கு முன்னரே கண்ணன், ஓடிச் சென்று அவரை மார்போடு அணைத்துக் கொண்டான். இருவரின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

கண்ணன், குசேலரை ஆசனத்தில் அமரச் செய்து, அவரது கால்களைத் தன் மடிமீது எடுத்து வைத்து, ''நடந்து வந்ததால், உனது கால்கள் வலிக்குமே'' எனக் கூறியபடி தடவிவிட்டான்.

''நண்பா! சுசீலை எனக்கு என்ன கொடுத்து அனுப்பினாள்?'' என்று கண்ணன் ஆவலுடன் கேட்டான். மனைவி கொடுத்த அந்த எளிமையான அவலை எவ்வாறு கொடுப்பது எனத் தயங்கினார் குசேலர். கண்ணன் உரிமையுடன் குசேலரின் மடியில் கட்டியிருந்த துணி முடிச்சை எடுத்து, அவிழ்த்தான். ஒரு பிடி அவலை எடுத்து ஆவலோடு உண்டான். ''ஆகா! என்ன சுவை!'' என்று வியந்தான்.

கண்ணன், குசேலரை நீராடச் செய்து, அறுசுவை உணவு பரிமாறினான். இருவரும் தமது பள்ளிக் காலத்துக் கதைகளைப் பேசி மகிழ்ந்தனர். குசேலரை ஓய்வெடுக்குமாறு கூறிவிட்டு, கண்ணன் சென்றான். தனக்களிக்கப்பட்ட அன்பான உபசரணையில் குசேலர் மிக்க மகிழ்ச்சியுற்றார்; தன் நண்பனின் உயர்ந்த குணங்களை வியந்து போற்றினார்; கண்ணனின் நட்பே தனக்குக் கிடைத்த பெருஞ் செல்வம் என நினைத்தார்; கண்ணனிடம் உதவி கேட்பது தமது நட்புக்கு இழுக்காகும் எனக் கருதினார்.

அடுத்த நாள் காலையில் எழுந்த குசேலர், நண்பனிடம் எதுவும் கேட்காமலே விடைபெற்றுக்கொண்டு, தம் ஊரை அடைந்தார். என்ன ஆச்சரியம்! குடிசைகள் எல்லாம் மாட மாளிகைகளாகத் தோற்றமளித்தன. குசேலர், தமது வீட்டை நோக்கிச் சென்றார். அவரது குடிசையும் மாளிகையாக மாறியிருந்தது; செல்வத்தால் நிறைந்திருந்தது. பிள்ளைகள் ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்தனர்.

யாவும் கண்ணனின் கருணை என்பதைக் குசேலர் உணர்ந்து கொண்டார்; உள்ளம் உருகினார்; கண்ணனைத் தொழுது போற்றினார்.

குறை ஒன்றும் இல்லை
மறைமூர்த்தி கண்ணா!

| | |
|---|---|
| பாகம் செய்தல் | உணவு தயாரித்தல் |
| கந்தலாடை | பழைய, கிழிந்த ஆடை |

## பயிற்சி

**கதையை ஒழுங்குபடுத்தி இலக்கமிடுவோம்.**

1. கண்ணன் குசேலரை மிகுந்த அன்போடு வரவேற்றான்.
2. கண்ணன் துவாரகையின் அரசனானான். குசேலர் சுசீலையை மணமுடித்தார்.
3. குசேலரின் குடிசை மாளிகையானது; செல்வத்தால் நிறைந்தது.
4. குசேலரும் கண்ணனும் ஒன்றாகக் கற்றவர்கள்; நெருங்கிய நண்பர்கள்.
5. குசேலர் தனது நண்பனைக் காண, கல்லும் முள்ளும் வருத்த நடந்து சென்றார்.
6. வறுமையைப் போக்க உற்ற நண்பரிடம் உதவி கேட்பதில் தவறேதும் இல்லை என சுசீலை கூறினாள்.

7. கண்ணன், குசேலர் அறியாமல் அவரது வறுமையைப் போக்க நினைத்தான்.

8. குசேலரின் குடும்பம் வறுமையால் வாடியது.

9. கண்ணனின் அன்பில் திளைத்த குசேலர் உதவி ஏதும் கேட்காது வீடு திரும்பினார்.

10. சுசீலை, கண்ணனுக்குக் கொடுப்பதற்காக வீட்டிலிருந்த அவலைப் பாகம் பண்ணிக் கொடுத்தாள்.

## செயற்பாடு

துயர் துடைத்த கண்ணன் என்ற கதையை நாடகமாக நடிப்போம்.

# 6 சித்திரைப் புத்தாண்டு



வீட்டு முற்றத்தில்
நிற்கும் வேம்பு பூக்கத்
தொடங்குகிறது. பழம் தரும்
மரங்கள் துளிர் விட்டுச்
சிலிர்க்க ஆரம்பிக்கின்றன.
குயில்கள் கூவுகின்றன.
பூமரங்கள் பூத்துக்
குலுங்குகின்றன.
இவை வசந்த காலத்தின்
வரவை நமக்கு உணர்த்தி
விடுகின்றன.

வசந்த காலம் சித்திரை மாதத்தில் தொடங்குகிறது. சித்திரை மாதத்தின் முதலாவது நாளில் சூரியன், பன்னிரு இராசிகளுள் முதலாவதாகிய மேட இராசியில் பிரவேசிக்கிறது. இந்நாளையே நாம் புதுவருடப் பிறப்பு என்று கொண்டாடி வருகிறோம்.

சித்திரைப் புத்தாண்டு என்றால் நம் எல்லோருக்கும் ஒரே கொண்டாட்டம். புத்தாண்டு பிறப்பதற்கு முன்னரே வீட்டையும் சுற்றாடலையும் தூய்மை யாக்குவோம்; பலகாரம் சுடுவோம். புத்தாண்டுத் தினத்தன்று அதிகாலையில் துயிலெழுவோம்; பலவகையான மலர்கள், இலைகள், அறுகு, மஞ்சள், பால் முதலானவற்றைக் கொண்டு ஆக்கப்படும் மருத்துநீர் வைத்து நீராடுவோம்; புத்தாடை அணிவோம்.





வீட்டு வாசலில் மாவிலை, தோரணம் கட்டி அலங்கரிப்போம்; நிறைகுடம் வைப்போம்; முற்றத்தில் கோலம் போடுவோம்; கடவுளுக்குப் பூமாலை சூட்டி விளக்கேற்றுவோம்; கடவுளை வணங்குவோம்; பெற்றோர், பெரியோரிடம் ஆசீர்வாதம் பெறுவோம்.



முற்றத்தில் பொங்கல் பொங்கி, படையல் செய்து சூரியனை வழிபடுவோம்; பெரியவர்களிடம் கைவிசேடம் பெறுவோம்; ஆலயம் சென்று வழிபடுவோம்; எம்மால் இயன்ற தான தருமங்கள் செய்வோம்; உறவினர் நண்பர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்கூறி மகிழ்வோம்; பொங்கல், பலகாரங்களை உறவினர், நண்பர்கள், அயலவர்களுடன் பகிர்ந்து உண்போம். உற்றார், உறவினர் வீடுகளுக்குச் சென்று உறவாடி மகிழ்வோம்.



புத்தாண்டையொட்டி ஊர்களில் மாட்டுவண்டிச் சவாரி, கிளித்தட்டு, மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், வழுக்குமரம் ஏறுதல், தயிர்முட்டி உடைத்தல், கயிறிழுத்தல் முதலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். மக்களின் ஒற்றுமையை வலுப்படுத்து வனவாக இந்நிகழ்ச்சிகள் அமைகின்றன.

சித்திரைப் புத்தாண்டு, தமிழர்களால் மட்டுமன்றி எமது சகோதர இனத்தவர்களான சிங்களவர்களாலும் மரபுரீதியாகக் கொண்டாடப்படுகின்றது.

புத்தாண்டை வரவேற்று
புத்துணர்ச்சி பெறுவோம்!

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. சித்திரைப் புதுவருடம் எப்போது பிறக்கிறது?

2. புத்தாண்டு தினத்தன்று நாம் செய்யும் சுபகருமங்கள் ஐந்தைக் குறிப்பிடுக.

3. மருத்துநீர் தயாரிக்கப் பயன்படும் பொருள்கள் மூன்று தருக.

4. புத்தாண்டை ஒட்டி இடம்பெறும் விளையாட்டுக்கள், கலை நிகழ்ச்சிகள் எதற்கு உதவுகின்றன?

5. இலங்கையில் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடும் இரு இனத் தவர்களும் யாவர்?

## செயற்பாடு

வகுப்பறையில் கோலம் போடுவோம்; நிறைகுடம் வைப்போம்.

# 7 சிவசின்னங்கள்

சின்னம் என்றால் அடையாளம் என்பது பொருள். சிவனுக்கு அடையாளமாக விளங்குபவை சிவசின்னங்கள். விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம் என்பன சிவசின்னங்களாகும். இவை எமது அஞ்ஞானத்தைப் போக்கி, தீமைகளில் இருந்து எம்மைப் பாதுகாப்பவை; இறைவனது பெருங் கருணையை நினைவூட்டுபவை.

நாள்தோறும் நீராடியவுடனும், வழிபாடு செய்யும் நேரங்களிலும் இவற்றைப் பக்தியுடன் தரித்தல் வேண்டும். இவற்றைத் தரிப்பதால் இறைவன் நம்முள் குடியிருக்கும் உணர்வு உண்டாகும்.

## விபூதி



விபூதி என்பதன் பொருள் 'மேலான செல்வம்' என்பதாகும். விபூதியை திருநீறு என்றும் கூறுவோம். சைவசமயிகளின் கடமைகளில் திருநீறு அணிதல் பிரதானமானதாகும். திருநீறு பாவங்களை நீக்குவது; உயிர்களைக் காப்பது.

பசுவின் சாணத்தைக் காய வைத்து நெருப்பிலே சுடுவதனால் உண்டாகும் தூய நீறே திருநீறாகும். திருநீறு வெண்மை நிறமானது. வெண்மை தூய்மைக்கு அடையாளம். வெண்ணீற்றை அணிவதால் எமது அகமும் புறமும் தூய்மை அடைகின்றன.

திருநீற்றைத் தரிக்கும் முறை இருவகைப்படும். ஒன்று பரவிப் பூசுதல். இது **உத்தூளனம்** எனப்படும். இரண்டாவது வகை **திரிபுண்டரம்** எனப்படும். திருநீற்றை நீரிலே குழைத்து மூன்று குறியாகத் தரிப்பதை இது குறிக்கும். சமயதீட்சை பெற்றோர் மாத்திரம் திரிபுண்டரமாகத் தரிப்பர்.

திருநீற்றை அணியும்போது, வடக்கு நோக்கி அல்லது கிழக்கு நோக்கி நின்று, சிவபெருமானைத் தியானித்தபடி, நிலத்தில் சிறிதளவேனும் சிந்தாது, அண்ணாந்து ''சிவ சிவ'' என்று சொல்லி, வலக்கை நடுவிரல் மூன்றினாலும் தரித்தல் வேண்டும்.

குரு, சிவனடியார் முதலானோர் திருநீற்றைத் தரும்போது, அடக்கத் துடன் அவர்களை வணங்கி, இடது கையின்மீது வலது கையை வைத்து அதனைப் பெற்று, அணிந்து கொள்ள வேண்டும்.

திருநீற்றின் மகிமையை நாயன்மார்களின் வரலாறுகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. வெப்புநோயால் வருந்திய பாண்டிய மன்னனை, திருஞானசம்பந்தர் திருநீற்றை மருந்தாகப் பூசிக் குணப்படுத்தினார். சூலை நோயால் வருந்திய அப்பர் சுவாமிகளுக்கும் திருநீறே மருந்தாயிற்று.

திருவாலவாய்த் திருத்தலத் திருப்பதிகம் ஒன்றில் திருஞானசம்பந்தர் திருநீற்றின் மகிமையை 'மந்திரமாவது நீறு', 'முத்தி தருவது நீறு', 'தேசம் புகழ்வது நீறு' என்றெல்லாம் போற்றிப் பாடியுள்ளார். 'நீறில்லா நெற்றி பாழ்' என்று ஔவையார் கூறியுள்ளார்.

ஒருவன் திருநீறு அணியும்போது, அத்திருநீறு படிகின்ற இடமெல்லாம் சிவமயமாகின்றதென்று சைவநூல்கள் கூறுகின்றன.

திருச்சிற்றம்பலம்

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே


திருச்சிற்றம்பலம்

– திருஞானசம்பந்தர்



சிவபெருமானுக்கு 'உருத்திரன்' என்றும் ஒரு பெயர் உண்டு. 'அக்கம்' என்பது கண் எனப் பொருள்படும். உருத்திராக்கம் என்றால் 'உருத்திரனுடைய கண்' என்பது கருத்து; சிவனது கண்ணீர் என்றும் பொருள்படும். சிவபெருமான் நம்மிடம் கொண்டுள்ள பேரிரக்கத்திற்கு அடையாளமாக உருத்திராக்கம் அமைகின்றது.

சிவனடியார்கள் உருத்திராக்கம் அணிவது வழக்கம். சிலர் ஓர் உருத் திராக்க மணியினைக் கழுத்திலே எப்போதும் அணிந்திருப்பர். சிலர் சிவபூசை, புராணபடனம் முதலியவற்றைச் செய்யும்பொழுது மாத்திரம் உருத்திராக்க மாலை அணிவர். சைவ மடாலயங்களின் முதல்வர்கள் தலையிலும் கழுத்திலும் கைகளிலும் உருத்திராக்க மாலை அணிந்திருப்பர்.



திருநீறும் உருத்திராக்கமும் புறத்தே அணியும் சிவசின்னங்கள். அகத்தே எப்போதும் நாம் தியானிக்க வேண்டியது பஞ்சாட்சர மந்திரம். இதனைத் 'திருவைந்தெழுத்து' என்றும் சொல்வோம். எங்களுக்குத் துன்பம் நேரும் பொழுது அவல ஓசை எழுப்பாது, 'நமசிவாய' அல்லது 'சிவாயநம' என்ற பஞ்சாட்சர மந்திரத்தைச் சொன்னால், அது நற்றுணையாக அமையும். அப்பர் சுவாமிகளை கல்லுடன் கட்டிக் கடலில் பாய்ச்சியபொழுது, அவர் 'நமசிவாய' என்றே துதித்தார்.

அப்பொழுது அந்தக் கல் தெப்பமாக மிதந்தது. நாமும் ஐந்தெழுத்தை ஓதினால் துன்பங்களிலிருந்து அது நம்மைக் காக்கும்.

**''நற்றுணையாவது நமச்சிவாயவே''** என்பது அப்பர் சுவாமிகள் வாக்கு

***‘‘சிவாயநம என்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒருநாளும் இல்லை’’***

**- நல்வழி**

ஒருவன் சைவக் குடும்பத்திலே பிறந்து, சைவச் சூழலிலே வளர்ந்தாலும் சிவதீட்சை பெற்ற பின்னரே ‘சைவசமயி’ ஆகிறான். சிவதீட்சை பெற்றவனே திருநீறு, உருத்திராக்கம் என்பவற்றை விதிப்படி அணியவும் பஞ்சாட்சர மந்திரத்தை முறைப்படி செபிக்கவும் சைவக் கிரியைகளில் பங்குகொள்ளவும் உரிமை உடையவன் ஆகிறான். எனவே, உரிய காலத்தில் சிவதீட்சை பெறுதல் சைவர்களாகப் பிறந்த நம்முடைய தலையாய கடமையாகும்.

வாய்மை, தூய்மை, அன்பு, இரக்கம், பணிவு முதலான பண்புகளை வளர்த்துச் சிவபக்தியைப் பெருக்குவதற்குச் சிவசின்னங்கள் நமக்கு உறுதுணையாக அமைகின்றன.

**சிவசின்னங்கள் அணிவோம்;**
**சிவனருள் பெறுவோம்!**

## பயிற்சி

**சரியான விடையின் கீழ்க் கோடிடுவோம்.**

1. சிவசின்னங்களைத் தரிப்பதால் நீங்கக் கூடியது.

   i. விஞ்ஞானம் ii. அஞ்ஞானம் iii. மெய்ஞ்ஞானம்

2. திருநீற்றைப் பரவிப் பூசும் முறை

   i. உத்தூளனம் ii. குறிமுறை iii. திரிபுண்டரம்

3. உருத்திராக்கம் என்பதன் பொருள்

   i. விநாயகரின் கண் ii. சிவனின் கண் iii. முருகனின் கண்

4. திருவைந்தெழுத்து என்பதை இவ்வாறும் கூறலாம்.

   i. பஞ்சபூதம் ii. பஞ்சபுராணம் iii. பஞ்சாட்சரம்

5. திருநீறு பூசி சூலை நோய் நீங்கப்பெற்றவர்

   i. அப்பர் ii. சம்பந்தர் iii. பாண்டியன்

6. அகத்தே தியானிக்கும் சிவசின்னம்

   i. உருத்திராக்கம் ii. திருநீறு iii. பஞ்சாட்சரம்

**விடை எழுதுவோம்.**

1. சிவசின்னங்கள் எவை?
2. திருநீற்றைத் திரிபுண்டரமாகப் பூசத்தக்கவர்கள் யாவர்?
3. 'நீறில்லா நெற்றி பாழ்' என்று கூறியவர் யார்?
4. உருத்திராக்கம் எதற்கு அடையாளமாக விளங்குகிறது?
5. புறத்தே அணியும் சிவசின்னங்கள் யாவை?

## செயற்பாடு

திருநீற்றை முறையாக அணிந்து பழகுவோம்.

# 8 பூசலார் நாயனார்

இறைவன் அன்பே வடிவானவன்; தன்னை அன்போடு வழிபடும் அடியார்களுக்கு அருள் புரிபவன்; அவர்களின் தூய ஆசையைப் பூர்த்தி செய்பவன். பூசலார் என்ற ஒரு அடியவரின் விருப்பினை சிவபெருமான் நிறைவு செய்த வரலாறு மிகவும் அற்புதமானது.



திருநின்றவூர் என்ற ஊரிலே பூசலார் வாழ்ந்துவந்தார். அவர் சிவபெருமான்மீது மிகுந்த பக்தி உடையவர். தான் அன்போடு வழிபடும் சிவனுக்கு கோயில் ஒன்று கட்ட வேண்டும் என்ற ஆசை அவருக்கு ஏற்பட்டது. அவரோ ஏழை. கோயில் கட்டுவதற்குப் பொருள் வேண்டுமல்லவா? எங்கெங்கோ அலைந்து திரிந்து பெரு முயற்சி செய்தார். பொருள் கிடைக்கவில்லை.

எனினும் அவர் மனம் தளரவில்லை. ''இறைவனுக்கு எனது மனத்திலே ஒரு திருக்கோயிலைக் கட்டுவேன்'' என்று தீர்மானம் செய்துகொண்டார். கோயில் கட்டத் தேவையான கருங்கல், மரம், சுண்ணாம்பு முதலான அனைத்தையும் மனத்திலே சேகரித்துக்கொண்டார். ஒரு நல்ல நாள் பார்த்தார். அத்தினத்திலிருந்து தனது மனத்திலே கோயிலைக் கட்டத் தொடங்கினார்.

திருப்பணி வேலைகள் மனதிலே இடம்பெற்றன. கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என ஒவ்வொரு மண்டபமாகக் கட்டப் பட்டன. தொடர்ந்து தூபி, இராஜ கோபுரம், திருக்குளம், திருத்தேர் அனைத்தும் மனதிலே உருவாகின. அவர் மனத்தில் கட்டிய கோயில் நிறைவு பெற்றது. ''இறைவா! நாளை கும்பாபிஷேகம், இக் கோயிலில் எழுந்தருள வேண்டும்'' என்று பூசலார் இறைவனை வேண்டினார். கும்பாபிஷேகத்துக்குத் தேவையான தர்ப்பை, நெய், சமித்து முதலிய அனைத்துப் பொருள்களையும் ஆயத்தம் செய்தார்.

பூசலார், மனக்கோயில் கட்டிய அதேவேளை, காஞ்சிபுரத்தில் ஐயடிகள் காடவர்கோன் என்ற மன்னனும் சிவனுக்கு ஒரு கோயிலைக் கட்டிக் கொண்டிருந்தான். அத்திருப்பணிக்கு ஏராளமான பணம் செலவு செய்தான். கட்டடக் கலைஞர் பலரும் இரவுபகலாக வேலை செய்தார்கள். கோயில் வேலைகள் பூர்த்தியடைந்தன.

கும்பாபிஷேகத்துக்கு நாள் குறிக்கப்பட்டது. அன்றிரவு மன்னனின் கனவிலே சிவபிரான் தோன்றினார். ''அன்பனே, நீ குறித்த கும்பாபிஷேக தினத்தை மாற்றிக் கொள். திருநின்றவூரிலே பூசலார் கட்டிய கோயிலில் நாளை கும்பாபிஷேகம். நான் அங்கு போக வேண்டும்'' என்று கூறி மறைந்தார்.

மன்னன் கண்விழித்து எழுந்தான்; கனவை நினைத்து ஆச்சரியம் அடைந்தான்; பூசலார் கட்டிய கோயிலைக் காண ஆவலுற்றான்; பரிவாரங்கள் சூழ திருநின்றவூரை வந்தடைந்தான்; கோயிலைத் தேடினான். கோயிலைக் காணவில்லை! ''பூசலார் கட்டிய கோயில் எங்கே?'' என்று வருவோர் போவோர் எல்லோரிடமும் விசாரித்தான். ''பூசலார் இந்த ஊரிலேதான் வசிக்கிறார். அதோ, அந்த வீட்டில் இருக்கிறார். ஆனால் அவர் கோயில் ஏதும் கட்டவில்லை'' என்று கூறினர்.

அரசன், பூசலார் இருக்குமிடம் தேடிச் சென்றான். அவரைக் கண்டு வணங்கினான். ''தாங்கள் கட்டிய கோயில் எங்கே இருக்கிறது? இன்று தாங்கள் கட்டிய கோயிலில் கும்பாபிஷேகம் என்று இறைவன் எனது கனவிலே அருளிச் செய்தார்'' என்று கூறினான்.

பூசலாருக்கு எல்லையற்ற பரவசம் உண்டாயிற்று. இறைவனின் திருவருளை வியந்து அதிசயித்தார். ''அரசே! நான் மனதிலேதான் கோயில் கட்டினேன். அதை மதித்து எம்பெருமான் எனக்கு அருள் செய்துள்ளாரே'' என்று ஆனந்தபரவசத்தோடு கூறினார்.

அரசன் பூசலாரை விழுந்து வணங்கினான். மனக்கோயிலின் மகிமை யையும் சிவபிரானின் திருவருளையும் நினைந்து வியந்தான்.

பூசலார் அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவராகப் போற்றப்படுகிறார்.

**எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்**

| | |
|---|---|
| சமித்து | யாகத்திற்குப் பயன்படும் சுள்ளி |

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. பூசலாருக்கு ஏற்பட்ட விருப்பம் யாது?
2. பூசலார் தனது விருப்பத்தை எவ்வாறு நிறைவேற்றினார்?
3. மன்னன் ஐயடிகள் காடவர்கோன் செய்த திருப்பணி யாது?
4. மன்னன் குறித்த கும்பாபிஷேக தினத்தை மாற்றுமாறு இறைவன் பணித்தமைக்கான காரணம் யாது?
5. இக்கதை, நமக்கு உணர்த்துவது யாது?

## செயற்பாடு

பூசலார் நாயனார் கதையைச் சுருக்கமாக எழுதுவோம்.

# 9

# ஆலய வழிபாடு



கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார். கடவுளை நாம் வீட்டிலும் வழிபடலாம்; ஆலயத்திலும் வழிபடலாம். எனினும் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று எம் முன்னோர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பசுவின் உதிரம் அதன் உடலெங்கும் இருக்கிறது. எனினும் அது பாலாக மாறி அதன் மடி வழியாகவே சுரக்கிறது. அதுபோலவே இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருந்தாலும் அவனது அருள் விசேடமாகச் சுரக்கும் இடமாக ஆலயம் விளங்குகிறது. அங்கு சென்று நாம் வழிபடும்பொழுது இறைவனுடைய அருளை இலகுவாகப் பெறுகிறோம்.

நாம் ஆலயத்துக்கு நாள்தோறும் சென்று முறைப்படி வழிபாடு செய்தல் வேண்டும். நாள்தோறும் செல்லமுடியாதவர்கள், விசேட நாட்களிலாவது தவறாது சென்று வழிபடல் வேண்டும்.

ஆலயம் புனிதமான இடம். அங்கு செல்லும்போது நாமும் புனித மாகச் செல்லவேண்டும். ஆலயம் செல்லும்போது நீராடி, தோய்த்து உலர்ந்த ஆடையணிந்து, திருநீறு தரித்து, இறை சிந்தனையுடன் செல்ல வேண்டும்; இயன்றளவு பூசனைத் திரவியங்களை எடுத்துச் செல்வது நன்று.

ஆலயத்தை அண்மித்ததும் கை, கால் கழுவி முதலில் கோபுரத்தை வணங்க வேண்டும். சிவநாமங்களை உச்சரித்தபடி உள்ளே சென்று, முதலில் விக்னேஸ்வரரை வணங்க வேண்டும். பின் மூலவரை வணங்க வேண்டும். அதன் பின்னர் பரிவார தெய்வங்களை முறைப்படி வணங்க வேண்டும். இறுதியாக சண்டேசுவரரை வணங்கி சிவதரிசன பலனைத் தந்தருளுமாறு பிரார்த்திக்க வேண்டும்.

கொடித்தம்பத்திற்கு முன்பாக ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குவது அட்டாங்க நமஸ்காரமாகும். பஞ்சாங்க நமஸ்காரம் என்பது தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குவதாகும்.

சுவாமி தரிசனத்தின்பின், கைகளைக் கூப்பியபடி இறைநாமங்களை உச்சரித்தவாறு ஆலயத்தை வலம்வரல் வேண்டும். மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் வீதியை வலம் வந்து வழிபடுதல் முறை. அபிஷேக காலத்திலும் நிவேதன காலத்திலும் மூலவருக்கு திரை இட்டிருக்கும் வேளையிலும் உள்வீதி வலம்வருதல், வீழ்ந்து வணங்குதல் முதலானவை செய்தல் ஆகாது.

வழிபாட்டின் நிறைவில் விபூதி பிரசாதம் பெற்று, சிந்தாது தரித்தல் வேண்டும். பின் ஆலயத்தில் அமைதியான ஓரிடத்தில் அமர்ந்து தோத் திரப்பாடல்களைப் பண்ணுடன் பாடுவதையோ, பஞ்சாட்சரம் செபிப்பதையோ செய்தல் வேண்டும்.

ஆலயத்தினுள் அமைதி பேணவேண்டும். வீண் வார்த்தை பேசுதல், உரத்துச் சிரித்தல், நித்திரை செய்தல், கால் நீட்டியபடி இருத்தல், எச்சில் உமிழ்தல், விளையாடுதல் முதலானவை ஆலயத்தினுள் செய்யத்தகாதவை. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆலயத்தினுள் நிதானத்தையும் ஒழுங்கு முறையையும் தவறவிடல் ஆகாது.

ஆலயங்களுக்குச் சென்று கடவுளை வழிபடும்போது நமது மனம் தூய்மை அடைகின்றது. மனதிலே படிந்திருக்கும் தீய எண்ணங்கள் மறைந்து நல்ல எண்ணங்கள் வளர்கின்றன. கடவுளை வணங்குவதன் மூலம் நமது துன்பங்கள் நீங்கி வாழ்வில் அமைதியும் ஆனந்தமும் கிடைக்கும்.

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன் பசு ஏறி நனை கவிழ்வாய்
மத்தம் மத யானை உரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும்பு அணிவான் திருக் கேதீச்சரத்தானே.

திருச்சிற்றம்பலம்

- சுந்தரமூர்த்தி நாயனார்

## ஆலயம் தொழுவது சாலவும் நன்று!

| | |
|---|---|
| பூசனைத் திரவியங்கள் | பூசைக்குரிய பொருள்கள் |
| மூலவர் | மூலஸ்தான இறைவன் |

### பயிற்சி

**சரியானால் சரி எனவும் பிழையானால் பிழை எனவும் எழுதுவோம்.**

1. ஆலயத்தில் அமைதி பேண வேண்டும்.
2. அபிஷேக காலத்தில் உள்வீதி வலம் வர வேண்டும்.
3. பஞ்சாங்க நமஸ்காரத்தில் எட்டு அங்கங்கள் நிலத்தில் பொருந்தும்.
4. ஆலய வழிபாட்டால் மனம் தூய்மையடைகிறது.
5. ஆலயத்தினுள் கால் நீட்டியபடி அமரலாம்.

**விடை எழுதுவோம்.**

1. இறைவனின் அருள் விசேடமாகச் சுரக்கும் இடம் யாது?
2. ஆண்கள் செய்யும் நமஸ்காரம் எது?
3. பெண்கள் செய்யும் நமஸ்காரம் எது?
4. சிவதரிசன பலனைத் தருபவர் யார்?
5. ஆலய வழிபாட்டினால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.
6. ஆலயத்தினுள் செய்யத்தகாதவை யாவை?

## செயற்பாடு

'நத்தார் படை' தேவாரத்தை மனனம் செய்து, பக்தியுடன் ஓதுவோம்.

# 10 முன்னேஸ்வரம்



இலங்கையில் உள்ள பழைமையான சிவன் கோயில்களில் முன்னேஸ்வரமும் ஒன்றாகும். அது இலங்கையின் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் சிலாபத்தில் அமைந்துள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பன முறையாய் அமைந்த இத்திருத்தலம் அழகேஸ்வரம் எனவும் அழைக்கப்படுகின்றது. முன்னேஸ்வரம் ஆலயத்தின் மூலவராக, ஸ்ரீ முன்னைநாதப் பெருமான் இலிங்க வடிவில் காட்சியளிக்கின்றார். ஸ்ரீ வடிவாம்பிகாதேவி என்னும் திருப்பெயருடன் அன்னை பார்வதிதேவியார் காட்சியளிக்கின்றார்.

கோயிலின் புனித தீர்த்தமாக தெதுறு ஓயா என அழைக்கப்படும் மாயவன் ஆறு விளங்குகின்றது. இவ்வாலயத்தின் தலவிருட்சம் அரச மரமாகும்.

ஸ்ரீ இராமபிரான், இத் திருத்தலத்தில் வழிபட்டு, இராவணனைக் கொன்றதனால் உண்டான பிரம்மஹத்தி தோஷம் நீங்கப்பெற்றார். இலங்கையில் அரசாண்ட அரசர்கள் பலர் இக்கோயிலுக்கு மானியங்கள் பலவற்றை வழங்கி வழிபட்டார்கள் என்பது கல்வெட்டுக்களால் தெரியவருகின்றது.


இவ்வாலயத்தில் இறைவனுக்கும், இறைவிக்குமாக இரு மகோற்சவங்கள் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன. வருடாந்தம் ஆவணி பௌர்ணமியை தீர்த்த நாளாகக் கொண்டு இருபத்தேழு நாட்கள் இறைவனுக்கு மகோற்சவம் நடைபெறுகின்றது. அத்திருவிழாவில் இடம்பெறும் பக்தோற்சவம் பிரசித் தமானது. அன்றைய தினம் அறுபத்து மூன்று நாயன்மாரும் வீதிவலமாக எழுந்தருளுவர்.

மாசி மகத்தை தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு பத்து நாட்கள் அம்பிகைக்கு மகோற்சவம் இடம்பெறுகிறது. இங்கு வருடாந்தம் சித்திரை மாதத்தில் இடம்பெறும் வசந்த நவராத்திரி விழா தனித்துவமானது. இன மத பேதமின்றி எல்லாத் தரப்பினரும் வழிபடும் தலமாக முன்னேஸ்வரம் விளங்குகின்றது.

**முன்னை வினை தீர்ப்பார் முன்னைநாதர்!**

## பயிற்சி

**முன்னேஸ்வரம் தொடர்பான விபரங்களை நிரப்புவோம்.**




**விடை எழுதுவோம்**

1. முன்னேஸ்வரத்தை வழிபட்டு பிரம்மஹத்தி தோஷம் நீங்கப் பெற்றவர் யார்?
2. இக்கோயிலில் இறைவனுக்கு மகோற்சவம் நடைபெறும் காலம் யாது?
3. இங்கு இறைவிக்கு எத்தனை நாட்கள் மகோற்சவம் நடைபெறும்?
4. பக்தோற்சவம் என்றால் என்ன?
5. சித்திரை மாதத்தில் இங்கு நடைபெறும் விழா யாது?

## செயற்பாடு

ஈழத்து ஈச்சரங்களது படங்களைச் சேகரித்து ஒட்டுவோம்.

# 11 பஞ்சபுராணம்

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்பன பஞ்ச புராணம் எனப்படுவன. இவற்றை நாம் ஒழுங்கு முறைப்படி ஓத வேண்டும். பஞ்ச புராணத்தை ஓதத் தொடங்க முன்னரும் ஓதி முடித்த பின்னரும் 'திருச்சிற்றம்பலம்' எனக் கூறுவோம். ஆலயங்களிலும், வீட்டிலும் பஞ்ச புராணத்தை ஓதி இறையருளைப் பெறுவோம்.

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

கங்கையைச் சடையுள் வைத்தார்
கதிர்பொறி அரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார்
திசை திசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார்
மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையுள் அனலும் வைத்தார்
ஐயன் ஐயாறனாரே.

- திருநாவுக்கரசர்

## திருவாசகம்

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

- மாணிக்கவாசகர்

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

- திருமாளிகைத்தேவர்

## திருப்பல்லாண்டு

ஆர் ஆர் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசை அனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

- சேந்தனார்

## பெரியபுராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப் பெருகு சிவஞானம்
பவம் அதனை அற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமை இலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்தாம் உணர்ந்தார் அந்நிலையில்.

- சேக்கிழார்

திருச்சிற்றம்பலம்

# இசைக்கு மகிழ்ந்து இரங்குவான் ஈசன்!

## பயிற்சி

**பஞ்சபுராணத்தைக் கண்டுபிடித்துக் கட்டமிடுவோம்.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| க | தே | வா | ர | ம் | சி | வ | ந | ல |
| ஏ | ம | உ | இ | தெ | ரு | து | ய | க |
| தி | ரு | வா | ச | க | ம் | த | இ | அ |
| ரு | ந | மி | ச | வ | லி | லு | சி | கை |
| வி | தி | ரு | ப் | ப | ல் | லா | ண் | டு |
| சை | பெ | ரி | ய | பு | ரா | ண | ம் | ம் |
| ப் | ம | லு | ய | தெ | ச | ல | ஞ | ட் |
| பா | கி | வ | லை | யு | ப | ம | ங் | டி |

**பாடத்தில் தரப்பட்டுள்ள திருப்பாடல்கள் தொடர்பான விபரங்களைக் கொண்டு இடை வெளிகளை நிரப்புவோம்.**

| பாடல் வரி | திருமுறைப்பாடல் வகை | பாடியவர் |
|---|---|---|
| பால்நினைந் தூட்டும்... | ________ | ________ |
| ________ | ________ | சேந்தனார் |
| ________ | தேவாரம் | ________ |
| ________ | திருவிசைப்பா | ________ |
| சிவனடியே ... | ________ | ________ |

## செயற்பாடு

பஞ்சபுராணத்தை மனனம் செய்து ஓதுவோம்.

# 12 இளையான்குடி மாற நாயனார்



சிவன்மீது மாறாத அன்பு கொண்டவர்களே சிவனடியார்கள். அவர்களின் அன்பு எல்லையில்லாதது. எவ்வளவு துன்பங்கள், தடைகள் ஏற்பட்டாலும் அவர்கள் சிவபக்தியிலும் தொண்டிலும் வழுவாது இருப்பவர்கள்; சோதனைகள் ஏற்படும்போது அவற்றைத் துணிவோடு எதிர்கொள்ளும் தைரியம் கொண்டவர்கள். இறைவன்மீது கொண்ட நம்பிக்கையும் பக்தியுமே அவர்களின் பலமாகும். அத்தகைய அடியார்களுள் ஒருவர் இளையான்குடி மாற நாயனார் ஆவார். அவர் தனது வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனையை எவ்வாறு எதிர்கொண்டார் என்பதை அறிந்து கொள்வோம்.

மாறனார் என்பதே அவரது பெயர். இளையான்குடி என்னும் அவரது ஊர்ப்பெயரையும் சேர்த்து இளையான்குடி மாற நாயனார் எனப்படுகிறார். இளையான்குடி மாறனாருக்கு வயல் புலங்கள் மிகுதியாக இருந்தன. அவற்றிலிருந்து பெறும் வருவாய் முழுவதையும் சிவனடியார்களைத் திருவமுது செய்வித்தலிலேயே அவர் செலவிட்டுவந்தார்.

மாறனாருடைய செல்வம் வரவரச் சுருங்கியது. தான் செய்யும் தொண்டைத் தொடர்வதற்கு வயல் புலங்களை ஒவ்வொன்றாக விற்றார். அயலவர், அறிந்தவர்களிடத்திலே கடன் வாங்கியும் தன் தொண்டைத் தொடர்ந்து செய்தார். நாளடைவிலே தீராத வறுமை அவரைச் சூழ்ந்துகொண்டது. எந்தச் சூழ்நிலையிலும் மாறனார் இந்த அறச்செயலைத் தளராது செய்வார் என்பதனை உலகத்தோருக்குக் காட்ட இறைவன் திருவுளங்கொண்டான்.

ஒரு நாள் இடி முழக்கத்துடன் பெருமழை பெய்தது. அந்த வேளையிலே சிவனடியார் ஒருவர் மாறனார் வீட்டிற்கு வந்தார். மாறனார் சிவனடியாரை எதிர்கொண்டு வரவேற்றார்; திருமேனி ஈரம் போக்கினார்; ஆசனம் கொடுத்து அமரச் செய்தார்.

மாறனார், சிவனடியாருக்கு அமுதூட்ட வேண்டும் என்று ஆவலுற்றார்; உள்ளே சென்றார். அங்கே ஒன்றும் இருக்கவில்லை. அத்தனை வறுமை! ''என்ன செய்யலாம்?'' என்று மனைவியாரிடம் வினவினார். ''வீட்டிலே ஓர் உணவுப் பதார்த்தமும் இல்லை. நேரமும் அகாலமாயிற்று. அயலவரும் இனி உதவமாட்டார்'' என்று சொல்லி மனைவியாரும் வருந்தினார்.

அறம் வளர்த்த சீமாட்டியல்லவா அவர்! திடீரென அவருக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது. ''நீங்கள் ஏன் வருந்துகிறீர்கள்? காலையில் வயலிலே விதைத்த நெல் இந்த மழை வெள்ளத்திற் கட்டாயம் மிதக்கும். அவற்றை வாரி எடுத்து வாருங்கள். குத்தி அரிசியாக்கி விரைவிலே சமைத்துத் தருகிறேன்'' என்றார். மாறனார் மகிழ்ந்தார்; கூடையைத் தலையிலே கவிழ்த்துக் கொண்டு, கொட்டுகின்ற மழையில் தட்டுத் தடுமாறிச் சென்று வயலை அடைந்தார்; மிதக்கும் நெல்லை அரித்தெடுத்துக்கொண்டு விரைந்து வீடு திரும்பினார். எதிர்நோக்கிக்கொண்டு வாயிலிலே நின்ற மனைவியாரிடம் தான் கொண்டுவந்த நெல்லைக் கொடுத்தார்.

இப்போது நெல் கிடைத்துவிட்டது. ஆனால் சமைப்பதற்கு விறகில்லை! சிதைந்த வீட்டின் கூரையில் உள்ள சில வரிச்சுகளை மாறனார் அறுத்தெடுத்தார். அவற்றைக் கொண்டு, மனைவியார் அடுப்பு மூட்டி, நெல்லை வறுத்து, குற்றி, அரிசியாக்கி, சோறு சமைத்தார்.

இனி, கறிக்கு என்ன செய்வது? மாறனார் புறக்கடையில் முளை கொண்ட கீரைகளை அவசர அவசரமாகப் பிடுங்கிக் கொண்டு வந்து மனைவி கையிற் கொடுத்தார். மனைவியாரும் தனது கைவண்ணத்தால் அவற்றைப் பலவித கறிகளாக்கிச் சமைத்து முடித்தார்.

துயில் கொள்வார்போற் கிடந்த சிவனடியாரை அமுது செய்ய எழுந் தருளும்படி மாறனார் வேண்டினார். அடியார் எழுந்தார்; சோதி வடிவமாய்த் தோன்றினார். இளையான்குடி மாறநாயனாரும் மனைவியாரும் அது கண்டு திகைத்து நின்றனர். சிவபெருமான் உமாதேவியாருடன் விண்ணிலே காட்சி கொடுத்தருளினார். நாயனாரை நோக்கி, ''அன்பனே! அடியார் பூசையைப் பாதுகாத்த நீ மனைவியோடும் எம் உலகத்திற் சேர்ந்து, பேரின்பப் பெருவாழ்வு எய்துவாய்'' என்று அருளினார்.

சிவபெருமானே சிவனடியார் வேடந்தரித்து வந்தார் என்பதை இருவரும் அறிந்து பரவசமாகினர்.

**இட்டுக் கெட்டார் எவரும் இல்லை.**

| | |
|---|---|
| புறக்கடை | கொல்லைப்புறம் |
| அகாலம் | பொருத்தமற்ற காலம் |

## பயிற்சி

**விடை எழுதுவோம்.**

1. சிவனடியார்களின் இயல்புகள் இரண்டு தருக.
2. மாறனார் செய்த திருத்தொண்டு யாது?
3. மாறனார் சிவனடியாருக்கு செய்த உபசாரங்கள் எவை?
4. மாறனாரின் மனைவி மனம் வருந்தியமைக்கான காரணம் யாது?
5. சமைப்பதற்கான நெல்லை மாறனார் எவ்வாறு பெற்றார்?
6. சிவனடியாராக வந்தவர் யார்? அவ்வாறு வந்தமைக்கான காரணம் யாது?

**பின்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்போம்.**

1. சிவபக்தி -
2. சிவனடியார் -
3. திருத்தொண்டு -
4. திருவமுது செய்தல் -

## செயற்பாடு

இளையான்குடி மாறநாயனாரின் கதையை நாடகமாக நடிப்போம்.

# 13 சரியைத் தொண்டு



இறைவனைப் பல்வேறு விதமாக நாம் வழி படுகிறோம். அவ்வழிபாட்டு முறைகளை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நான்காக வகைப் படுத்தலாம்.

நாம் இறைவனுக்கும் இறை அடியார்களுக்கும் தொண்டு செய்வது சரியை ஆகும். அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை முதலானவற்றைச் செய்து இறைவனை வழிபடுவது கிரியை ஆகும். இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம் முதலானவற்றின் மூலம் இறைவனைத் தியானிப்பது யோகமாகும். இறைவனை மெய்யறிவால் உணர்வது ஞானமாகும்.

இவற்றை இறைவனை அடைவதற்குரிய மார்க்கங்களாக - வழிகளாக நமது சமயம் வகுத்துத் தந்துள்ளது. இவற்றுள் சரியை மார்க்கம் பற்றி இங்கு நோக்குவோம்.

இறைவன் வீற்றிருக்கும் திருக்கோயிலையும் கோயில் வீதி முதலானவற்றையும் துப்பரவு செய்கிறோம். திருக்கோயிலில் நந்தவனம் உள்ளது. அதையும் நாம் தூய்மைப்படுத்துகிறோம். அங்கே பூசைக்கு வேண்டிய பூக்களையும் இலைகளையும் பழங்களையும் தரும் மரம், செடி, கொடிகளை நட்டுப் பராமரிக்கிறோம்.



பூக்களைப் பறித்து மாலை தொடுத்துக் கொடுக்கிறோம். பூசைக்கு வேண்டிய பாத்திரங்கள், தீபங்கள் முதலானவற்றை விளக்குகிறோம். பூசை வேளைகளில் மணியடித்தல், தீபமேற்றுதல், தூபமிடல், திருமுறை ஓதல் முதலான தொண்டுகளைச் செய்கிறோம். இறைவன் வீதிவலம் வரும் போது குடை, கொடி, ஆலவட்டம், தீவர்த்தி பிடித்தல், சாமரை வீசுதல் முதலான தொண்டு களைச் செய்கிறோம். இவ்வாறாக இறைவனுக் குச் செய்யும் தொண்டுகள் எல்லாம் சரியை மார்க்கத்தில் அடங்குவன ஆகும்.

இறைவனுக்குச் செய்வது போலவே இறையடியார்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும். அவர்களது பசி, தாகம் போக்குதல், வேண்டிய வேறு உதவிகளைச் செய்தல் யாவும் சரியைத் தொண்டே ஆகும். இவ்வாறாக அடியார்களுக்குத் தொண்டு செய்வதே மாகேஸ்வர பூசை ஆகும் (மகேஸ்வரன் - இறைவன்; மாகேஸ்வரர் - இறையடியார்).

நாயன்மார்களுள் பலர் சரியைத் தொண்டாற்றி இறையருள் பெற்றவர்கள் ஆவர். அவர்களுள் திருநாவுக்கரசு நாயனார் குறிப்பிடத்தக்கவர். ஆலயந்தோறும் சென்று, புல் பூண்டுகளைச் செதுக்கியும் கற்களையும் முட்களையும் அகற்றியும் தொண்டு செய்வதற்கு உழவாரம் எனும் கருவியை அவர் எப்போதும் தன்னுடன் வைத்திருந்தார்; அதனால் **உழவாரப் படையாளி** என்று போற்றப்பெற்றார்.

நாவுக்கரசரின் தமக்கையாரான திலகவதியாரும் நந்தவனம் அமைத்தல், பூசைக்கு மலர் கொய்தல், மாலை கட்டுதல் முதலான சரியைத் தொண்டுகளைச் செய்தார்.

கணநாதநாயனார் என்ற மெய்யடியார், கோயிற்பணிகள் செய்வதில் சிறந்து விளங்கினார்; சரியைத் தொண்டு செய்பவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, அவர்களை மேலும் தேர்ச்சியடையச் செய்தார்.

கோயிலில் விளக்கேற்றி, நற்கதியடைந்த நமிநந்தி அடிகள் பற்றி நீங்கள் படித்திருக்கிறீர்கள் அல்லவா?

சரியை மார்க்கம் எவராலும் பின்பற்றத்தக்க எளிமை உடையதாகும். ஆலயத்திலே சுவாமி தரிசனம் செய்வதோடு மட்டும் நின்றுவிடாது, இயன்றவரை தொண்டு செய்து இறையருள் பெறுவோம்.

சரியைத் தொண்டின் சிறப்பினை நாவுக்கரசரது பின்வரும் தேவாரத்தின் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.



திருச்சிற்றம்பலம்

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்
நலம் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையில் பலி கொண்டு உழல்வாய்
உடலுள் உறு சூலை தவிர்த்து அருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே!

திருச்சிற்றம்பலம்

என் கடன் பணி செய்து கிடப்பதே!

| | |
|---|---|
| இயமம் | தகாதவற்றை நீக்குதல் |
| நியமம் | தக்கவற்றைச் செய்தல் |
| ஆசனம் | உடலை இருக்கப் பழக்குதல் |
| பிரணாயாமம் | மூச்சைப் பழக்குதல் |

## பயிற்சி

**தொடர்புபடுத்துவோம்.**

| | |
|---|---|
| 1. சரியை | இறைவனைத் தியானித்து வழிபடுதல் |
| 2. கிரியை | இறைவனை மெய்யறிவால் உணர்தல் |
| 3. யோகம் | இறைவனுக்கும், அடியார்களுக்கும் தொண்டு செய்தல் |
| 4. ஞானம் | இறைவனைப் பூசை முதலியவற்றால் வழிபடுதல் |

**சரியைத் தொண்டு செய்து முத்தியடைந்த நாயன்மார்களையும் அவர்கள் செய்த தொண்டுகளையும் பட்டியற்படுத்துவோம்.**

| நாயன்மார்கள் | | தொண்டுகள் |
|---|---|---|
| 1. ______________________ | – | ______________________ |
| 2. ______________________ | – | ______________________ |
| 3. ______________________ | – | ______________________ |
| 4. ______________________ | – | ______________________ |

## செயற்பாடு

அருகில் உள்ள ஆலயத்திற்கு சென்று சரியைத் தொண்டுகள் புரிவோம்.

# 14 சைவ வாழ்வு

நமது வாழ்வில் கிரியைகள் முக்கிய இடம் பெறுகின்றன. இறைவனை வழிபடும் நோக்கில் கோயில்களில் பல கிரியைகளைச் செய்கிறோம். அவை **கோயிற்கிரியை** எனப்படும். நமது இல்லங்களிலும் சில கிரியைகளைச் செய்கிறோம். அவை பெரும்பாலும் வழிபாட்டு நோக்கில் அமைவன அல்ல; மனித வாழ்க்கைக் கட்டங்களில் ஆற்றப்படும் சடங்கு சம்பிரதாயங்களாகவே அமைகின்றன. அத்தகைய கிரியைகளை **வீட்டுக்கிரியை** என்போம். அவற்றுள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

## பெயர் சூட்டுதல்

ஒவ்வொருவருக்கும் அவரவர் பெயரே அடையாளமாக அமைகின்றது. ஆதலால் நமக்கு வைக்கப்படும் பெயர் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறு கின்றது. நாம் ஆற்றும் செயல் ஒவ்வொன்றையும் ஒன்றுக்கு மேற்பட்ட பலனைத் தருவதாக அமைத்துக்கொள்வதே புத்திசாலித்தனமானது. அதனாலே நமது முன்னோர்கள் கடவுளின் பெயர்களையே தமது பிள்ளைகளுக்குச் சூட்டினார்கள். பிள்ளைகளை அழைக்கும்போதெல்லாம் இறைநாமத்தை ஓதிய பலனும் கிடைக்கும் என்று அவர்கள் நம்பினார்கள். பெயரின் அத்தகு முக்கியத்துவம் கருதி, பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டும் நிகழ்ச்சியை தெய்வாம்சம் பொருந்திய ஒரு சடங்காகவே அவர்கள் நிகழ்த்தினார்கள். அச்சடங்கை **நாமகரணம்** என்றும் வழங்குவர்.

பெரும்பாலும் குழந்தை பிறந்து முப்பத்தோராம் நாளில் பெயர்சூட்டு வைபவம் இடம்பெறும். குழந்தைக்கு வைப்பதற்காகத் தேர்ந்தெடுத்த பெயரை குழந்தையின் காதிலே மூன்று முறை சொல்லி அதன் வாயில் இனிப்புப்பானத்தைப் பருக்குவார்கள்; உறவினர் நண்பர்களுக்கு விருந்து பசாரம் செய்து மகிழ்வார்கள்.



## காது குத்துதல்

குழந்தை பிறந்து ஆறாம் மாதத்தில், காது குத்துதல் ஒரு சடங்காக இடம் பெறுகிறது. முற்காலத்தில் ஆண் பிள்ளைகளுக்கும் காது குத்தி, கடுக்கன் போடுதல் எமது மரபாக இருந்துள்ளது. தற்காலத்தில் பெண்குழந்தைக்கே காது குத்தப்படுகிறது. 'தோடு' குழந்தைக்கு அழகைத் தருவதுடன், காதிலுள்ள நரம்பு மையங்களைத் தூண்டி ஆரோக்கியத்தையும் தருகிறது.





''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்பர் ஆன்றோர். சூரிய பகவானுக்கு நன்றி செலுத்த நாம் தைப்பொங்கலைக் கொண்டாடுகிறோம். இது உழவர்களின் திருநாளாகப் போற்றப்படுகிறது.

தை மாதம் பிறந்த பின், தைப்பூசத் தினத்தன்று அல்லது நல்லதொரு நாளில், வயலில் விளைந்த புதிய நெற்பயிரை அறுவடை செய்யும் சடங்கு இடம்பெறும்.

அறுவடை செய்யப்பட்ட கதிர்களில் சிலவற்றை மாவிலையோடு சேர்த்து, வீட்டு வாயிலில் கட்டுவர். எஞ்சியவற்றை உமி நீக்கி, அரிசியாக்கி, சோறாகச் சமைப்பர். கறிகளும் சமைத்து, இறைவனுக்கு நிவேதனம் செய்து, குடும்பத்தார் அனைவரும் சேர்ந்து உண்டு மகிழ்வர். இதுவே **புதிருண்ணல்** சடங்காகும். வளமான வாழ்வு, ஒற்றுமை, மகிழ்ச்சி போன்றவற்றை இச்சடங்கு உணர்த்துகிறது.

## புதுமனை புகுதல்



இச்சடங்கினை **கிருகப்பிரவேசம்** என்றும் அழைப்பர். புதிய வீடொன்றைக் கட்டிய பின், நல்லதொரு நாளிலே மங்கலப் பொருள்களுடன் அவ் வீட்டினுள் குடிபுகுதல் 'புதுமனை புகுவிழா' என அழைக்கப்படும்.

சுவாமிப்படங்களுடன் குத்துவிளக்கு, நிறைகுடம், மஞ்சள், வெற்றிலை பாக்கு, பால், பழம், உப்பு, நெல், தங்கம் முதலானவற்றை எடுத்துக் கொண்டு நல்ல நேரத்தில், பசுவுடன் வீட்டினுள் புகுவார்கள். அவற்றை சுவாமி அறையில் வைத்து வழிபடுவர். பால் காய்ச்சி அனைவருக்கும் வழங்குவர். இச்சடங்கும் ஒற்றுமை, மகிழ்ச்சி, வளமான வாழ்வு முதலானவற்றை ஏற்படுத்துவதாகும்.

சடங்குகள் அனைத்தும் சமயம் சார்ந்தவை; கூட்டு வாழ்க்கையை முக்கியப்படுத்துபவை; அர்த்தம் நிறைந்தவை. சரியான முறையில் அவற்றைக் கடைப்பிடித்து வாழ்வில் ஈடேறுவோம்.

## மரபுகள் பேணி மாண்புற வாழ்வோம்!

| நிவேதனம் | படைத்தல் |
|---|---|

### பயிற்சி

**பின்வருவனவற்றை பொருத்தமான சடங்குகளின்கீழ் எழுதுவோம்.**

1. பெயர் சூட்டுதல்.
2. கடுக்கன் போடுதல்.
3. நெற்பயிரை அறுவடை செய்தல்.
4. பால் காய்ச்சி வழங்குதல்.
5. தோடு அணிதல்.
6. காதிலே மூன்று முறை பெயர் கூறுதல்.
7. கதிர்களை மாவிலையில் வைத்து வீட்டு வாயிலில் கட்டுதல்.
8. நல்ல நேரத்தில் மங்கலப் பொருள்களுடன் வீட்டிற்குள் செல்லல்.
9. கிருகப்பிரவேசம்.
10. முப்பத்தொராம் நாளில் நடைபெறுதல்.
11. காது நரம்பைத் தூண்டுதல்.
12. தைப்பூசம்

| புதுமனை புகுதல் | காதுகுத்துதல் | புதிருண்ணல் | நாமகரணம் |
|---|---|---|---|
| | | | |

## செயற்பாடு

வீட்டில் நடைபெறும் சடங்குகள் பற்றிக் கலந்துரையாடுவோம்.

# 15 பாணபத்திரன்

வரகுணபாண்டியன் மதுரையை ஆண்டுவந்தான். அவன் இசைப்பிரியன். அவனது அரசவையின் ஆஸ்தான இசை வித்துவானாக பாணபத்திரன் விளங்கினான்.

பாண்டிய மன்னனின் அரசவைக்கு ஒருமுறை வடதேசத்தில் இருந்து இசைக்கலைஞன் ஒருவன் வருகைதந்தான். அவன் சிறந்த வீணை வித்துவான். அவனது பெயர் ஏமநாதன். அவனது இன்னிசை மழையில் நனைந்த மன்னன் அவனுக்குப் பொன்னும் பொருளும் வாரி வழங்கினான். பாண்டிய மன்னன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஏமநாதன் சிலகாலம் மதுரையில் தங்கியிருந்தான்.

ஏமநாதன் மிகச்சிறந்த இசைக்கலைஞனாயினும் தன்னைவிட இசையில் வல்லவர்கள் எங்குமில்லை என்ற கர்வம் அவனிடம் மேலோங்கியிருந்தது. தனது புகழை பாண்டி நாட்டிலும் நிலைநிறுத்த விரும்பினான். இசைப்போட்டி ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு பாண்டிய மன்னனிடம் வேண்டுகோள் விடுத்தான். பாண்டி நாட்டில் ஏமநாதனுக்கு நிகரான இசைக்கலைஞர் எவரும் இல்லை என்பதை மன்னன் அறிவான். ஆயினும் மன்னனால் ஏமநாதனின் வேண்டுகோளைத் தட்ட முடியவில்லை. எவ்வாறாயினும் பாண்டிநாட்டின் பெருமையைக் காக்க வேண்டுமே! தனது ஆஸ்தான இசைவித்துவானான பாணபத்திரனை அழைத்தான்; ஏமநாதனுடைய வேண்டுகோளைக் கூறினான்.

''பாணபத்திரரே! ஏமநாதன் சிறந்த கலைஞன். அதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. அவனை இசைப்போட்டியில் வென்று பாண்டி நாட்டின் பெயரையும் புகழையும் நீரே காக்க வேண்டும்'' என்று பாணபத்திரனுக்கு மன்னன் கட்டளை இட்டான்.

''அரசே! இறையருள் எம்பக்கம் இருக்கும். போட்டியில் நான் ஏமநாதனை வெல்லுவேன்'' என்றான் பாணபத்திரன்.

மறுநாள் இசைப்போட்டி என்று ஊரெங்கும் முரசறையப்பட்டது.

மன்னனிடம் போட்டியில் வெல்வேன் என்று உறுதியாகக் கூறி விட்டாலும் பாணபத்திரனின் உள்ளத்தில் கலக்கம் ஏற்பட்டது. ஏமநாதனுடைய திறமையை பாணபத்திரன் அறிவான். அவனது சீடர்கள் மக்கள் கூடும் இடங்களில் பாடல்கள் பாடி தமது திறமையை வெளிப்படுத்தி வந்தார்கள். ''சீடர்களின் திறமையே இவ்வளவு என்றால் ஏமநாதனது திறமை எந்தளவாக இருக்கும்! அவனை வெல்லுவதற்கு யாரால் முடியும்?'' பாணபத்திரன் மனம் சோர்வுற்றது.

இறைவனே தஞ்சம் என்று மதுரைச் சோமசுந்தரப் பெருமான் ஆலயத் திற்குச் சென்றான் பாணபத்திரன்; இறைவனை மனமுருகி வழிபட்டான். ''பாண்டிநாட்டின் புகழைக் காக்க வேண்டும்; ஏமநாதனைப் போட்டியில் வெல்ல வேண்டும்! இறைவா, உன் அடியவனை நீயே காக்க வேண்டும்!'' என்று இறைஞ்சினான்.

தன்னை அன்போடு வழிபடுபவர்கள் வேண்டுவதை எல்லாம் ஈபவனாகிய இறைவன், பாணபத்திரனுக்கு உதவத் திருவுளம் கொண்டார். அரையில் அழுக்குப் படிந்த கந்தை; ஒரு கையில் மழுங்கிய கோடரி; மறுகையில் வீணை; தலையில் விறகுக்கட்டு - இவற்றுடன் விறகு வெட்டியானார் மதுரைச் சோமசுந்தரப் பெருமான்.

விறகுவெட்டி மதுரை வீதிகளில் விறகு விற்றுத் திரிந்தான்.

மாலைக்காலம் வந்தது. விறகுவெட்டி களைப்புற்றான்; ஏமநாதன் தங்கியிருந்த வீட்டை அடைந்தான்; திண்ணையில் ஓய்வெடுத்தான். சற்று நேரத்தில் அங்கு தேவகானம் எழுந்தது - விறகுவெட்டியின் விரல்கள் வீணையை மீட்டத் தொடங்கின. அவன் பாடத் தொடங்கினான்.



ஏமநாதன் அந்த இசையில் மயங்கினான்; பாடுபவன் யார் என்று அறியும் ஆவலுடன் வெளியே ஓடோடி வந்தான்; விறகுவெட்டி கண்களை மூடியவாறு பாடிக் கொண்டிருப்பதைக் கண்டான்; வியப்புற்றான்.

''ஆஹா! அற்புதம்! எவ்வளவு இனிமை! நீ யார்?'' என்று, விறகு வெட்டியிடம் வினவினான் ஏமநாதன்.

''நான் ஒரு விறகுவெட்டி; பாணபத்திரரிடம் இசை பயின்றவன்; இசை கற்கத் திறமை போதாது என்று பாணபத்திரர் என்னை அனுப்பிவிட்டார்; நான் இப்போது விறகு விற்று வயிறு வளர்க்கிறேன்'' என்றான் விறகுவெட்டி.

ஏமநாதனால் நம்பமுடியவில்லை. ''எங்கே, நீ முன்பு பாடிய இராகத்தை மீண்டும் ஒருமுறை பாடுவாயா?'' என்றான். வீணையை மடியில் கிடத்திய விறகுவெட்டி, சுருதி கூட்டிப் பாடத் தொடங்கினான். இசையின் இனிமை எங்கும் பரவியது; எல்லா உயிரும் இசை மயமாகின; மரங்கள் அசையவில்லை; கடல் ஒலிக்கவில்லை; நதிகள் பாயவில்லை; ஏமநாதனும் உறைந்து போனான்.

‘‘இது தேவகானம்! சாமானியர்களால் இது சாத்தியப்படாது. பாணபத்திரனின் சீடனே இப்படிப் பாடுகிறான் என்றால் பாணபத்திரனின் இசைப் புலமை எத்தகையதோ!’’ ஏமநாதன் அச்சமடைந்தான். தான், பாணபத்திரனுடன் போட்டியிடத் தகுதியற்றவன் என எண்ணி அன்றிரவே தன் சீடர்களுடன் பாண்டிநாட்டை விட்டு வெளியேறினான்.



அன்றிரவு மதுரைச் சோமசுந்தரப் பெருமான் பாணபத்திரன் கனவிலே தோன்றினார். ‘‘நாம் இன்று, விறகுவெட்டியாகச் சென்று ஏமநாதனின் முன் இசைபாடி வென்றோம். உனது வேண்டுகோளை நிறைவேற்றினோம்.’’ என்று திருவாய் மலர்ந்தருளினார். அடியார்க்கு எளியவராக வந்து தனக்கு அருள்புரிந்த பெருமானின் பெருங்கருணையை நினைந்து பாணபத்திரன் கண்ணீர் சொரிந்தான்; தொழுதான்.

பொழுது விடிந்தது. ஏமநாதன் ஊரைவிட்டு நீங்கியதை மன்னன் அறிந்து கொண்டான். அரசவை கூடியது. மன்னனின் ஆணைப்படி பாணபத்திரனின் இசைக்கச்சேரி அரங்கேறியது. யாவரும் இசை இன்பத்துள் திளைத்தனர். மனநிறைவடைந்த மன்னன் பாணபத்திரனை நன்றியோடு கௌரவித்தான்.

**கடவுளை நம்பினோர் கைவிடப்படார்!**

| சாமானியர் | சாதாரணமானவர் |
|---|---|

## பயிற்சி

**கூற்றுக்களை வாசித்து, கூறியவர்களின் பெயர்களை எழுதுவோம்.**

1. ‘‘இசைப்போட்டி ஒன்றை ஏற்பாடு செய்யுங்கள்.’’
2. ‘‘பாணபத்திரரே! ஏமநாதன் சிறந்த கலைஞன். அவனை இசைப்போட்டியில் வென்று பாண்டி நாட்டுப்பெயர் புகழை நீரே காக்க வேண்டும்.’’
3. ‘‘பாண்டி நாட்டின் புகழைக் காக்க வேண்டும். ஏமநாதனை போட்டியில் வெல்ல வேண்டும். இறைவா! உன் அடியவனைக் காக்க வேண்டும்.’’
4. ‘‘நீ முன் பாடிய இராகத்தை மீண்டும் பாடுவாயா?’’
5. ‘‘அரசே! இறையருள் எம்பக்கம் இருக்கும். போட்டியில் நான் ஏமநாதனை வெல்வேன்.’’
6. ‘‘ஆஹா! அற்புதம்! எவ்வளவு இனிமை! நீ யார்?’’
7. ‘‘நான் இப்போது விறகு விற்று வயிறு வளர்க்கிறேன்.’’
8. ‘‘ஏமநாதனின்முன் இசைபாடி வென்றோம். உனது வேண்டுகோளை நிறைவேற்றினோம்.’’

**பின்வருவோர் பற்றி மும்மூன்று வாக்கியங்கள் எழுதுவோம்.**

1. *பாணபத்திரன்* - ..................................................................
..................................................................
..................................................................

2. *ஏமநாதன்* - ..................................................................
..................................................................
..................................................................

3. *வரகுணபாண்டியன்* - ..................................................................
..................................................................
..................................................................

## செயற்பாடு

*'பாணபத்திரன்' கதையில் மனதைக் கவர்ந்த கதாபாத்திரமாக மாறி நடித்துக் காட்டுவோம்.*

# 16 கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்



மட்டக்களப்பில் பழைமையும் பெருமையும் வாய்ந்த சிவாலயமாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் விளங்குகிறது.

மட்டக்களப்பு நகரத்திலிருந்து தெற்கே, மண்முனை வழியாக ஏறத்தாழ இருபது கிலோ மீற்றர் தூரத்தில் கொக்கட்டிச்சோலைக் கிராமம் அமைந்துள்ளது. இங்கு முற்காலத்தில் கொக்கட்டி மரங்கள் சோலையாக வளர்ந்திருந்தமையால் இவ்விடம் கொக்கட்டிச்சோலை எனப் பெயர் பெறலாயிற்று. தென்னை மரங்களும் ஆல மரங்களும் குளிர்ந்த நிழலைப் பரப்பும் இயற்கை எழில் நிறைந்த இக்கிராமத்தின் மத்தியிலே தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது.

இக்கோயிலின் மூலஸ்தானத்தில் உள்ள இலிங்கம் தானாகவே தோன்றியதாகும். அதாவது சுயம்புலிங்கம் ஆகும். அதனாலேயே இந்த ஆலயம் தான்தோன்றீஸ்வரம் என்ற பெயரைப் பெற்றது.

மிகப் பழைய காலத்தில் மட்டக்களப்புப் பகுதியில் வேடுவர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தேன் தேடிக் காட்டுக்குச் சென்றபொழுது கொக்கட்டி மரம் ஒன்றிலே தேன்கூடு இருக்கக் கண்டனர்; தேன் எடுப்பதற்காக அம்மரத்தை வெட்டினர். அவ்வாறு வெட்டும்பொழுது அம்மரத்தடியில் ஒரு சிவலிங்கம் இருப்பதைக் கண்டனர்; கொத்துப்பந்தல் அமைத்து அதனை வழிபடத் தொடங்கினர்.

திருக்கோணேஸ்வரத்திலே திருப்பணி செய்துகொண்டிருந்த மன்னன் குளக்கோட்டன், இக்கோயிலின் பெருமையைக் கேள்வியுற்றான். அவன் கொக் கட்டிச்சோலைக்கு வந்து, தான்தோன்றீஸ்வரருக்குக் கோயில் கட்டினான். பதினாறாம் நூற்றாண்டிலே போர்த்துக்கேயர் சைவக் கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கினர். ஆயினும், இக்கோயில் அவர்களால் தாக்கப்படாது தெய்வாதீனமாகத் தப்பியது. சுயம்புலிங்கம் இப்பொழுதும் மூலஸ்தானத்தில் இருக்கின்றது. ஆயின், இந்த இலிங்கம் வெளியிலே தெரிவதில்லை. அங்கு உமாமகேசுவரர் விக்கிரகம் தாபிக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம்.

இக்கோயிலில் ஆவணி மாதத்தில் வரும் உத்தர நட்சத்திரத்திலே கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகும். பௌர்ணமியை அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும். அதனை இப்பிரதேச மக்கள் ‘தேரோட்டம்’ என்பர். தேரோட்டத்திற்கு அடுத்தநாட் காலையில் சூகரவேட்டையும் தீர்த்தோற்சவமும் நடைபெறும். சூகரம் என்பது பன்றி. சிவபெருமான் வேடுவக் கோலம் தாங்கி, பன்றி வேட்டை ஆடி, அருச்சுன னுக்கு அருள் புரிந்தார். சூகர வேட்டைத் திருவிழா இந்தக் கதையை நினை வூட்டுகின்றது.

**சுயம்பாய்த் தோன்றிய சுடரே போற்றி!**

## பயிற்சி

**விடை எழுதுவோம்.**

1. சுயம்புலிங்கம் என்பதன் பொருள் யாது?
2. வேடுவர்கள் சிவலிங்கத்தை எவ்வாறு கண்டெடுத்தனர்?
3. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்தின் மூலஸ்தானத்தில் காணப்படும் விக்கிரகம் எது?
4. இந்த ஆலயத்தின் மகோற்சவம் எப்போது ஆரம்பமாகி எப்போது நிறைவு பெறும்?
5. சூகரவேட்டைத் திருவிழா என்றால் என்ன? இத்திருவிழா எதனை நினைவூட்டு கிறது?

**கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது வோம்.**

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

## செயற்பாடு

ஈழத்துச் சிவாலயங்களின் அமைவிடங்களை இலங்கைப் படத்தில் குறிப்போம்.

# 17 குருபூசை



குருபூசை எனப்படுவது குருவை நினைந்து செய்யும் வழிபாடு ஆகும். எமது சமயத்தைக் காத்தருளியவர்களும் சமய நெறிப்படி வாழ்ந்து காட்டி முத்திநிலை எய்தியவர்களுமான அருளாளர்களே குருபூசைக்கு உரியவர்கள்.

பெரியபுராணத்திலே பாடப்பெற்றுள்ள அறுபத்துமூன்று நாயன்மார்கள், மாணிக்கவாசக சுவாமிகள், பெரியபுராணத்தை அருளிச்செய்த சேக்கிழார் சுவாமிகள், சைவசித்தாந்தத்தை உபதேசித்தருளிய சந்தான ஆசிரியர்கள் ஆகியோருக்கு குருபூசை செய்யவேண்டியது சைவசமயத்தவர்களாகிய எமது கடமையாகும்.

இவர்கள் யாவரும் எக்காலத்திலும் போற்றி வழிபடத்தக்கவர்கள். எனினும் சிறப்பாக குருபூசை அவரவருக்கு உரிய தினத்திலே செய்யப் படுகின்றது.

குரவர் ஒருவர் எந்த மாதத்தில் எந்த நட்சத்திரத்தில் முத்தியடைந்தாரோ, அதுவே அவரது குருபூசைத் தினமாகும். உதாரணம்: இளையான்குடி மாற நாயனார் ஆவணி மாதத்து மக நட்சத்திரத்திலே இறையடி சேர்ந்தார். எனவே ஆவணி மகமே இளையான்குடி மாறநாயனாரின் குருபூசை தினமாகும். வருடந்தோறும் ஆவணி மாதத்தில் வரும் மக நட்சத்திரத்தில் அவருக்கு குருபூசை நிகழ்த்தப்படுகிறது.

சிவாலயங்களிலே சிவனடியார்களுடைய திருவுருவங்கள் வழிபாட்டிற் காக நிறுவப்பட்டிருக்கும். பெரிய சிவாலயங்களிலே பெரும்பாலும் அறுபத்து மூன்று நாயன்மார்களது திருவுருவங்களும் இருக்கும். அவை இல்லாவிடினும் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வருடைய திருவுருவங்களாவது இருக்கும் (இந்த நால்வரையும் சமய குரவர்கள் என்பது வழக்கம்).

எந்த நாயனாருடைய குருபூசைத் தினமோ, அன்று அவருடைய திருவுருவச் சிலைக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பெரியபுராணத் தில் உள்ள அந்நாயனாரின் புராணம், படனம் செய்யப்படும். அத்துடன் ஏனைய திருமுறைகளும் ஓதப்படும்.

குருபூசை செய்யும்பொழுது மாகேஸ்வர பூசையும் நடைபெறும் வழக்கம் உண்டு. குருபூசைக்கு எழுந்தருளும் மாகேஸ்வரர்களை வரவேற்று, அவர்களை நாயனாராகவே பாவித்து, மலர்களால் அர்ச்சனை செய்து, தூபதீபம் காட்டி வணங்குவதும் அவர்களைத் திருவமுது செய்விப்பதும் வழக்கம். குருபூசைகளை கோயில்களில் மட்டுமன்றி மடங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் வீடுகளிலும் செய்தல் நன்று.

பாடிய **சம்பந்தர் வைகாசி மூலம்**, பயிலும் **அப்பர்**
நீடிய **சித்திரை மாதச் சதயம்**, **நிறைவன்றொண்டர்**
**ஆடியிற் சோதி**, **திருவாதவூரர்** நல் **ஆனிமகம்,**
தேடிய **சேக்கிழார் வைகாசிப் பூசம்** சிறந்தனரே.

குருவின் தாள் பணிவோம்;

குருவருள் பெறுவோம்

## பயிற்சி

**விடை எழுதுவோம்.**

1. குருபூசை என்றால் என்ன?
2. சைவ சமயத்தவர்கள் யார் யாருக்கு குருபூசை செய்வது வழக்கம்?
3. குரவர் ஒருவரின் குருபூசை தினம் எதைக் கொண்டு தீர்மானிக்கப்படும்?
4. மாகேஸ்வர பூசை என்றால் என்ன?

**தொடர்புபடுத்துவோம்.**

| | |
|---|---|
| 1. மாணிக்கவாசகர் | வைகாசிப் பூசம் |
| 2. திருநாவுக்கரசர் | ஆடிச் சுவாதி |
| 3. சேக்கிழார் | ஆனி மகம் |
| 4. சுந்தரர் | வைகாசி மூலம் |
| 5. திருஞானசம்பந்தர் | சித்திரைச் சதயம் |

## செயற்பாடு

சமய குரவர்களது குருபூசைத் தினங்களை அறிந்து, அவர்கள் அருளிய திருமுறைப் பாடல்களைப் பாடி வழிபடுவோம்.

# 18 குமரகுருபர சுவாமிகள்




தென்னிந்தியாவிலே ஸ்ரீ வைகுண்டம் என்னும் ஊரிலே சண்முக சிகாமணிக் கவிராயரும் அவர் மனைவி சிவகாமசுந்தரி அம்மையாரும் வசித்துவந்தனர். அவர்கள் முருகப்பெருமானை மிகுந்த பக்தியோடு வழிபட்டு வந்தனர்.

அவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. குலதெய்வமான முருகன் அருளாலே பிறந்த குழந்தைக்கு **குமரகுருபரன்** என்று பெயர் சூட்டினர். பார்த்தவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகுடன் குமரகுருபரன் வளர்ந்து வந்தான். ஆனால் ஐந்து வயதாகியும் அவனுக்குப் பேச்சு வரவில்லை. அதனால் பெற்றோர் வருந்தினர்.

''முருகப்பெருமானிடம் சென்று முறையிடுவோம்'' என்று அவர்கள் முடிவு செய்தனர்; குழந்தையை அழைத்துக்கொண்டு திருச்செந்தூர் முருகன் ஆலயத்திற்குச் சென்றனர்; கடும் விரதங்களை அனுட்டித்தனர்.

ஒருநாள் குமரகுருபரன் வாய் திறந்து ஏதோ பேசமுற்பட்டது போலத் தோன்றியது. அடுத்த நொடியில் அவன் கார்மேகம் மழை பொழிவது போலக் கவிமழை பொழியத் தொடங்கினான். முருகப் பெருமானின் அருளைப் போற்றும் அற்புதப் பாடலைப் பாடலானான். தேனினும் இனிய தமிழில் அவன் பாடிய அப்பாடல் **கந்தர் கலி வெண்பா** என்ற நூலாக அமைந்தது.

இளமைப் பருவத்தை எட்டிய குமரகுருபரர், தலயாத்திரை பல செய்தார்; பின் துறவறத்தை மேற்கொண்டார்; குமரகுருபர சுவாமிகள் என்று போற்றப்படலானார்.

குமரகுருபரசுவாமிகள் ஒரு தடவை மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தை அடைந்தார். அம்பாளின் சந்நிதியில் நின்றபோது, பரவச நிலையுற்ற அவர் ***மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்*** என்ற பக்திப்பனுவலைப் பாடினார்.

அக்காலத்தில் மதுரையைத் திருமலை நாயக்கன் என்ற மன்னன் ஆண்டுவந்தான். அந்த நூலின் அரங்கேற்றத்துக்கு ஏற்பாடு செய்யுமாறு அவனது கனவிலே தெய்வ கட்டளை பிறந்தது. மீனாட்சி அம்மன் கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் அரங்கேற்றம் ஆரம்பித்தது. புலவர்கள், அறிஞர்கள், பொது மக்கள் எனப் பலருந் திரண்டிருந்தனர். குமரகுருபரர் ஒவ்வொரு பாடலையும் பாடிப் பொருள் கூறும் நேர்த்தியை அனைவரும் மெச்சினர்.



குமரகுருபரரின் பாடல்களில் அனைவரும் தம்மை மறந்திருந்தனர். அப்போது அங்கே சிறுமி ஒருத்தி நுழைந்தாள். அவள் நேராகச் சென்று மிகுந்த உரிமையோடு மன்னன் மடியில் அமர்ந்து கொண்டாள்; பின் சட்டென்று எழுந்தாள்; மன்னனின் கழுத்தில் விளங்கிய முத்துமாலையைக் கழற்றி குமரகுருபரருக்கு அணிவித்துவிட்டு மூலஸ்தானத்தை நோக்கி நடந்தாள். அவ்வேளையில் பேரொளி ஒன்று தோன்றி மறைந்தது. குழந்தை வடிவில் வந்தவள் அந்த மீனாட்சி அம்மையே என்பதை உணர்ந்து, அனைவரும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர்.

ஒருமுறை வடநாடு சென்ற குமரகுருபரர், வடநாட்டு மொழியறிவைத் தந்தருளும்படி, **சகலகலாவல்லி மாலை** என்ற பிரபந்தத்தைப் பாடி கலைவாணியிடம் விண்ணப்பித்தார். அவரது வேண்டுதல் நிறைவேறியது.

புனித நதியான கங்கையின் கரையில் உள்ள காசி என்னும் தலம் முக்தி தரும் தலமாகும். அங்கு சிவபெருமான் விசுவநாதர் என்ற பெயரோடு கோயில் கொண்டுள்ளார். அத்தலத்திலே **குமாரசுவாமி மடம்** என்ற பெயரில் குமரகுருபரர் ஒரு மடத்தை நிறுவினார். அங்கிருந்து சொற்பொழிவாற்றிச் சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். இன்றும், அம்மடம் அப்பணிகளைத் தொடர்ந்து ஆற்றிவருகிறது.

**மொழிக்குத் துணை முருகா எனும் நாமம்!**

| | |
|---|---|
| பனுவல் | நூல் |
| விண்ணப்பித்தல் | வேண்டுகோள் விடுத்தல் |

## பயிற்சி

**விடை எழுதுவோம்.**

1. சண்முகசிகாமணிக் கவிராயரும், மனைவியும் தமது குழந்தைக்குச் சூட்டிய பெயர் யாது? அப்பெயரைச் சூட்டியமைக்கான காரணம் யாது?
2. குழந்தையின் பெற்றோர் மனம் வருந்தியமைக்கான காரணம் யாது?
3. குமரகுருபரன் முதலில் பாடியருளிய நூல் யாது?
4. குமரகுருபரரின் பாடலைக் கேட்பதற்குச் சிறுமியாக வந்தவர் யார்?
5. குமரகுருபரர், சகலகலாவல்லி மாலை பாடியமைக்கான காரணம் யாது?

**தொடர்புபடுத்துவோம்.**

| | |
|---|---|
| திருச்செந்தூர் | மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ் |
| மதுரை | கந்தர் கலிவெண்பா |
| சரஸ்வதி தேவி | குமாரசுவாமி மடம் |
| காசி | சகலகலாவல்லி மாலை |

## செயற்பாடு

குமரகுருபர சுவாமிகள் பற்றிய பேச்சொன்றை நிகழ்த்துவோம்.

# 19 இயற்கையில் இறைவன்

திருக்கோவிலூரில் உள்ள இலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கொடியேறித் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. மகோற்சவ காலமாதலால் ஆலய வீதியெங்கும் அலங்காரம்; மக்கள் கூட்டம். அகிலனும் ஆரணியும் தமது பெற்றோருடன் ஆலயத்துக்கு வந்திருந்தனர். கால் கை கழுவினர்; கோபுரத்தை வணங்கி உள்ளே சென்றனர். வசந்தமண்டபப் பூசை நடைபெற்றுக் கொண்டிருந்தது. வேதபாராயணம் முடிந்தது. அடுத்து பஞ்சபுராணம். முதலில் தேவாரம் பாடப்பட்டது.

திருச்சிற்றம்பலம்

மாதர் பிறைக் கண்ணியானை
மலையான்மகளொடும் பாடி
போதொடு நீர் சுமந்து ஏத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயாறடைகின்ற போது
காதல் மடப்பிடியோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்.

பின் திருவாசகம் முதலானவையும் ஓதப்பட்டன. அகிலனும் ஆரணியும் மனதினுள் அவற்றை ஓதி இறைவனை வணங்கினர். பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமான் இடபாரூடராக உள்வீதி வலம் வந்தார். சுவாமிக்குப் பின்னால் பக்தர்கள் பஜனை பாடினார்கள். அகிலனும் ஆரணியும் பஜனையில் கலந்து கொண்டனர். சுவாமி இருப்பிடம் வந்ததும் விபூதி, தீர்த்தம், சந்தனம், குங்குமம், முதலானவை பிரசாதமாக வழங்கப்பட்டன. அகிலனும் ஆரணியும் கோயிலைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டனர்.



**அகிலன்** : அப்பா! எவ்வளவு பெரிய கோயில்! எத்தனை வீதிகள்! பெரிய கோபுரம்!

**அப்பா** : ஆமாம், இது மிகவும் பழமை வாய்ந்த, பிரசித்திபெற்ற கோயில்.

**ஆரணி** : அப்பா, இது அரசமரம் தானே! இதனை ஏன் வணங்குகிறார்கள்?

**அப்பா** : இது இந்த ஆலயத்தின் தலவிருட்சம்.

**ஆரணி** : சுவாமி உள்ளேதானே இருக்கிறார். ஏன் நாங்கள் மரத்தை வணங்க வேண்டும்?

**அம்மா** : இறைவன் எங்கும் நிறைந்தவர் என்று படித்திருக்கிறீர்கள் அல்லவா?

**அகிலன்** : ஆமாம், இறைவன் தூணிலும் இருப்பான்; துரும்பிலும் இருப்பான்.

**அப்பா** : நாம் காண்கின்ற அனைத்துமே கடவுளின் வடிவங்கள். மரங்கள் எமக்கு எவ்வளவு பயன் அளிக்கின்றன! அவற்றைக் கடவுளாகப் போற்றி வணங்க வேண்டும் என்று எமது மூதாதையர் வழிகாட்டியுள்ளனர். அதுதான் தலவிருட்ச வழிபாடு.

**ஆரணி** : மரங்களை வெட்டுவது பாவம் என்று எங்கள் ஆசிரியர் கூறினார் அப்பா.

**அம்மா** : எங்கள் உடலை, உயிரை நாம் எப்படிப் பாதுகாக்கின்றோமோ அதேபோல் நம்மைச் சூழ உள்ள சகலவற்றையும் நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

**அப்பா** : அம்மா சொன்னது மிகவும் சரி. அதோ கோபுரத்தைப் பாருங்கள். 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்று சொல்வார்கள். கோபுரத்தில் உள்ள சிற்பங்கள் இந்தப் பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களையும் பிரதிபலிக்கின்றன. அவற்றை நாம் வணங்குவதும் கடவுள் வழிபாட்டுக்கு நிகரானதே.

**அகிலன்** : விலங்குகளை இறைவனுடைய வாகனங்களாக அமைத்து அவற்றையும் நாம் வழிபடுகிறோம் அல்லவா!

அம்மா : சரியாகச் சொன்னாய் அகிலா. விலங்குகள் இயற்கை அளித்த செல்வங்கள். அவை நேரடியாகவும் மறைமுகமாகவும் மனிதருக்கு உதவுகின்றன. அவற்றைத் துன்புறுத்துவது பெரும் பாவம். அவற்றிடம் நாம் கருணை காட்ட வேண்டும்.

அப்பா : 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்'. நாங்கள் சைவசமயத்தவர்கள். புலால் உண்பதை எமது சமயம் மறுக்கிறது. அனைத்து உயிரினங்களும் கடவுளின் வடிவமே என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அம்மா : எங்கள் அருளாளர்களும் இயற்கையில் இறைவனைக் கண்டு போற்றிப் பாடியிருப்பதைக் காணலாம். வசந்த மண்டபத்தில் பாடிய தேவாரம் தெரியுமல்லவா? அதில் ஆண் யானையும் பெண் யானையும் இறைவனாகவும் இறைவியாகவுமே காட்சியளித்தன என்றல்லவா அப்பர் சுவாமிகள் பாடியுள்ளார்.

அப்பா : ஆமாம், உண்மை தான்.



**ஆரணி** : அம்மா! இந்தத் தீர்த்தக்கேணி எவ்வளவு பெரிதாக இருக்கிறது. அதிலிருந்து ஏனம்மா தண்ணீரை எடுத்துச் செல்கிறார்கள்?

**அம்மா** : அது நோய்தீர்க்கும் அருமருந்து என்பது நம்பிக்கை.

**அப்பா** : இயற்கையின் அரும்பெரும் கொடை நீர்தானே. அதை நாம் மருந்து போல் கவனமாகக் கையாள வேண்டும். 'நீரின்றி அமையாது உலகு' என்றார் வள்ளுவர். 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்று ஒரு பழமொழியும் உள்ளது.

**அகிலன்** : பூமியில் தூய நீரின் அளவு மிகவும் குறைந்து வருகிறது. எதிர்காலத்தில் நீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படுமாம்.

**அம்மா** : உண்மைதான். இயற்கையை நாம் அழித்தால் இயற்கை எம்மை அழிக்கும்.

**அப்பா** : அம்மா சொன்னது உண்மைதான். இந்த உலகம் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்சபூதங்களால் ஆனது. எமது மூதாதையர் இவற்றை இறைவனாகவே வணங்கினார்கள்; நிறைவான வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

**அம்மா** : இன்று நாங்கள் இவற்றை மதிப்பதே இல்லையே!

**அப்பா** : அதுதான் நாம் செய்யும் பெரும் தவறு. பாதுகாத்துப் போற்ற வேண்டியவற்றை நாம் சிதைக்கிறோம். அதனால் பெரும் இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கிறோம்.

**ஆரணி** : இந்தக் கோயிலில் இயற்கையை எவ்வாறெல்லாம் பராமரிக்கிறார்கள்! எத்தனை பிராணிகள் - மாடு, மான், மயில், புறா என்று பார்க்க மிகவும் சந்தோஷமாக இருக்கிறது அம்மா.

**அம்மா** : கோயிலின் வீதியும் எவ்வளவு பசுமையாக இருக்கிறது. எவ்வளவு நிழல் தரும் மரங்கள், நீர்த்தடாகங்கள், மடங்கள். எத்துணை அழகாக இவற்றைப் பராமரிக்கிறார்கள்.

அப்பா : ‘கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’ என்பார்கள். இயற்கையைப் போற்ற வேண்டும் என்ற உண்மையை எமக்கு உணர்த்துவதாக இந்தக் கோயில் இருக்கிறது. இயற்கையை இறைவனாகப் போற்றினால் உலகம் சிறக்கும்.

அம்மா : நல்ல விடயங்கள் பலவற்றை அறிந்துகொண்டீர்கள். வாருங்கள் வீட்டுக்குச் செல்வோம்.

## இயற்கையில் இறைவனைக் காண்போம்!

| | |
|---|---|
| இடபாரூடர் | எருதுவாகனத்தில் எழுந்தருளுபவர் |
| அருளாளர் | இறையருள் பெற்றவர்கள் |

## பயிற்சி

**இடைவெளி நிரப்புவோம்.**

1. இறைவன் தூணிலும் இருப்பான்; ______________________
2. ______________________ கோடி புண்ணியம்.
3. ______________________ கை கூப்பி எல்லா உயிரும் தொழும்.
4. ______________________ அமையாது உலகு.
5. தாயைப் பழித்தாலும் ______________________
6. ______________________ குடியிருக்க வேண்டாம்.


**விடை எழுதுவோம்.**

1. தலவிருட்சத்தை நாம் வழிபட வேண்டும் என்று எமது மூதாதையர் வழிகாட்டியமைக்கான காரணம் யாது?
2. கோபுரத்திலுள்ள சிற்பங்கள் எவற்றைப் பிரதிபலிக்கின்றன?
3. புலால் உண்பதை நமது சமயம் மறுப்பதன் காரணம் யாது?
4. பஞ்சபூதங்கள் எவை?
5. இயற்கையை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும்?

## செயற்பாடு

'மாதர்ப்பிறைக் கண்ணியானை' தேவாரத்தினைப் பண்ணுடன் ஓதுவோம்.

# 20 அப்பூதியடிகள்




சோழநாட்டின் திங்களூரிலே அப்பூதி என்ற பெயரினை உடையவரும் சிவபக்தருமான அந்தணர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் அப்பூதியடிகள் என அழைக்கப்பட்டார். அக்காலத்திலே தமிழ்நாட்டில் திருநாவுக்கரசு சுவாமிகளின் புகழ் எங்கும் பரவியிருந்தது. அப்பூதியாரும் அவர்தம் சிவபக்திச் சிறப்பையும் பிற பெருமைகளையும் அறிந்தார். அவரிடம் மிகுந்த மதிப்பும் அன்பும் வைத்தார். ஆயினும் அப்பூதியார் நாவுக்கரசரை ஒரு போதும் நேரிலே கண்டதில்லை. காணாமலே கொண்ட பக்தி அது. அந்தப் பக்தி எல்லையற்று வளர்ந்தது. அப்பூதியார் தன் உடைமை ஒவ்வொன்றுக்கும் நாவுக்கரசரது பெயரையே

வைத்தார். தான் செய்யும் அத்தனை அறச் செயல்களையும் நாவுக்கரசர் பெயராலேயே செய்தார். அவருக்கு இரண்டு புதல்வர்கள். அவர்களுக்கும் நாவுக்கரசர் நாமத்தையே சூட்டினார். மூத்தவனை மூத்த திருநாவுக்கரசு என்றும் இளையவனை இளைய திருநாவுக்கரசு என்றும் அழைத்தார்.

இவ்வாறாக இருக்கும் காலத்தில் ஒருநாள், தலயாத்திரை மேற்கொண்டிருந்த திருநாவுக்கரசு சுவாமிகள், திருப்பழனத்து இறைவனை வணங்கி, தம் ஊருக்குத் திரும்பிச் செல்லும் வழியில் திங்களூரை அடைந்தார்.

கொடிய கோடையில் தன் முதியமேனி வாடும்படியாக நடந்துவந்த சுவாமிகள், அங்கிருந்த பெரியதொரு தண்ணீர்ப் பந்தலின் நிழலில் ஒதுங்கினார்; தாகம் தீரத் தண்ணீர் அருந்தினார்; நடந்த களைப்பு ஓரளவு தீர்ந்ததும் தலையை நிமிர்த்தினார்; 'திருநாவுக்கரசு தண்ணீர்ப்பந்தல்' என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டார்.

அயலிலே இருந்த ஏனைய அறச்சாலைகளிலும் சோலை, குளம் முதலானவற்றிலும் அப்பெயரே எழுதப்பட்டிருப்பதை நாவுக்கரசர் கண்டார்; ஆச்சரியம் உற்றவராய் அருகில் இருந்தவர்களிடம் ''இவ்வாறு செய்தவர் யார்?'' என்று வினவினார். அவர்கள், ''அனைத்தையும் செய்தவர் அப்பூதியடிகளே'' என்று பதிலளித்தார்கள். திருநாவுக்கரசர் அப்பூதியடிகளைச் சந்திக்க ஆவல் கொண்டார்; அவருடைய வீட்டை அடைந்தார்.

திருநாவுக்கரசர் வந்ததைக் கண்டதும் அப்பூதியடிகள் சிவனடியார் ஒருவர் வந்துள்ளார் என்று மகிழ்ந்து, அவரது திருவடியில் வீழ்ந்து வணங்கி வரவேற்றார். நாவுக்கரசரும் அவரைப் பணிந்தார்; ''நீர் செய்யும் பெரும் அறப்பணிகளைக் கண்டோம். அவற்றுக்கு உம்முடைய பெயரை இடாது வேறொருவரின் பெயரை இட்டதன் காரணம் என்ன?'' என்று வினவினார்.

அதைக் கேட்டதும் அப்பூதியடிகளுக்குக் கடுங்கோபம் வந்தது. ''சமணரதும் அவர்கள் சார்பாக நின்ற அரசனதும் சூழ்ச்சிகளையெல்லாம் தன் திருத்தொண்டுச் சிறப்பாலே வென்றருளியவருடைய பெயரையா வேறு பெயர் என்கிறீர்? நீர் யார்?'' என்று கடிந்து கேட்டார்.

''சூலை நோய் தந்து ஆட்கொள்ளப்பட்டு உய்யப்பெற்ற சிறியவன் யானே'' என்று அடக்கத்தோடு பதிலளித்தார் திருநாவுக்கரசர்.

அதைக் கேட்டதும் அப்பூதியடிகள் பரவசமுற்றார்; செய்வது அறியாது திகைத்தார்; ஆனந்த மிகுதியால் ஆடினார்; ஓடினார்; பாடினார்; திருநாவுக்கரசு சுவாமிகளின் பாதங்களைப் பணிந்து பூசித்தார்; தமது இல்லத்தில் திருவமுது செய்தருளுமாறு அவரிடம் விண்ணப்பித்தார். நாவுக்கரசரும் அதற்கு உடன் பட்டார்.

அப்பூதியடிகளின் துணைவியார் அறுசுவை உணவுகளைத் தயாரித்து முடித்தார். மூத்த திருநாவுக்கரசை வாழையிலை அரிந்து வருமாறு அனுப்பிவைத்தார். தோட்டத்தில் வாழையிலை அரியும்போது அவனைப் பாம்பொன்று தீண்டியது. அவன் அதைப் பொருட்படுத்தாது அவசரஅவச ரமாக வாழையிலையைக் கொண்டுவந்து கொடுத்தான்; கொடுத்ததும் மயங்கி வீழ்ந்து உயிர்நீத்தான். அதுகண்டு அப்பூதியடிகளும் துணைவியாரும் பதைபதைத்தார்கள். எனினும் தமது துன்பத்தை மறைத்துக்கொண்டார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு உணவளிக்க வேண்டும் என்ற எண்ணமே அவர்களிடம் மேலோங்கி நின்றது. இறந்த புதல்வனின் உடலை ஒரு பாயாற் சுற்றி மறைத்து வைத்துவிட்டு திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு உணவு பரிமாறினார்கள். உணவருந்துவதற்கு முன்பாக சுவாமிகள் அப்பூதியடிகள் தம்பதிக்கு திருநீறு சாத்தினார்; பின் ‘‘மூத்த திருநாவுக்கரசு எங்கே?’’ என வினவினார். அவர்களோ ‘‘இப்போது இங்கு அவன் உதவான்’’ என்று கூறினார்கள். அவர்களது தடுமாற்றத்தைக் கண்ணுற்ற நாவுக்கரசு சுவாமிகள் ‘‘உண்மையை உரையுங்கள்’’ என்றார். அதற்குமேலும் அவர்களால் மறைக்க முடியவில்லை; நடந்ததைக் கூறினார்கள்.

அப்பூதியடிகளதும் அவர் குடும்பத்தாரதும் பக்தியை மெச்சிய சுவாமிகள், இறைவனை நோக்கித் திருப்பதிகம் பாடி, இறந்த பாலகனை உயிர்ப்பித்தார். அந்த நிலையிலும் அப்பூதியடிகள் மகிழவில்லை. மாறாக சுவாமிகளுக்குத் திருவமுது செய்யத் தாமதமாகிறதே என்று வருத்தமே உற்றார். அவருடைய கவலையை உணர்ந்த திருநாவுக்கரசு சுவாமிகள், திருவமுது செய்தருளினார்.

அப்பூதியடிகளின் விருப்பத்துக்கு இணங்கி அவரது இல்லத்திலே சில நாட்கள் தங்கியிருந்து, பின் திருப்பழனம் என்னும் திருத்தலத்தை அடைந்து, இறைவன்மீது பதிகம் பாடினார். அப்பதிகத்தில் அப்பூதியடிகளின் பெருமையையும் எடுத்துரைத்தார்.

அடியார்க்குத் தொண்டு செய்வதையே தன் வாழ்க்கை இலட்சியமாகக் கொண்ட அப்பூதியடிகள், இறைவனைப் போற்றிப் பாடப்பட்ட பதிகத்திலும் இடம் பெற்றார்.

**தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!**

## பயிற்சி

**இடைவெளி நிரப்புவோம்.**

1. அப்பூதியடிகள் ______________________ வாழ்ந்தார்.
2. தண்ணீர்ப் பந்தலில் ________________ என்று எழுதப்பட்டிருந்தது.
3. திருநாவுக்கரசருக்கு ______________________ கொடுத்து இறைவன் ஆட்கொண்டார்.
4. திருநாவுக்கரசர் இறந்த பாலகனை ______________________
5. அப்பூதியடிகளின் பெருமை ______________________ திருத் தலத்தின்மீது பாடப்பட்ட பதிகத்தில் இடம்பெற்றுள்ளது.

'அப்பூதியடிகளின் பக்திச் சிறப்பு' எனும் தலைப்பில் பத்து வாக்கியங்கள் கொண்ட பந்தி ஒன்றை எழுதுவோம்.

## செயற்பாடு

அப்பூதியடிகளின் வரலாற்றைக் கதையாகக் கூறுவோம்; நாடகமாக நடிப்போம்.

21

# சைவ நற்பண்புகள்

சிவபுரம் கிராமத்துச் சிவன் கோயிலின் வருடாந்தத் திருவிழா ஆரம்பமாக இன்னும் சில நாட்களே உள்ளன. ஆலய வாசலில் குருக்கள், யோசனையோடு நின்றுகொண்டிருந்தார். அவ்வேளை, சிவபுரம் ஆரம்பப் பாடசாலை அதிபர் அங்கே வந்தார்.

''ஆலய வாசலில் யோசனையுடன் நின்றுகொண்டிருப்பதன் காரணம் என்ன?'' என்று அவரிடம் கேட்டார்.

''இன்னும் பத்து நாட்களில் கோயில் திருவிழா ஆரம்பமாக உள்ளது. செய்ய வேண்டிய வேலைகள் பல உள்ளன. அதைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார் குருக்கள்.

''கவலையை விடுங்கள் ஐயா! ஆலயத் தொண்டு செய்யப் புண்ணியம் செய்திருக்க வேண்டும். நானும், பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் உங்களுக்கு உதவிசெய்யக் காத்திருக்கிறோம். வருகிற வெள்ளிக்கிழமை நாங்கள் வருகிறோம்'' என்று கூறினார் அதிபர். குருக்கள் முகமலர்ச்சியோடு அதிபருக்கு விடைகொடுத்தார்.



வெள்ளிக்கிழமை காலை, பாடசாலைப் பிரார்த்தனை மண்டபத்தில் பூசை நிறைவுற்றதும் கூட்டுப்பிரார்த்தனை இடம்பெற்றது. அதன்பின் அதிபர் நற்சிந்தனை வழங்கினார். நற்சிந்தனையின் இறுதியில் கோயிலில் மேற்கொள்ள வேண்டிய சிரமதானம் பற்றி அறிவித்தார். மகிழ்ச்சியோடு அனைவரும் புறப் பட்டுக் கோயிலை அடைந்தனர். ஆலயக்குருக்கள், அனைவரையும் அன்புடன் ஆலயத்தினுள் அழைத்துச் சென்றார். ஆலய அறங்காவலர், அங்கு செய்ய வேண்டிய பணிகளை விபரித்தார். வீதிகளைச் சுத்தம் செய்தல், பூந்தோட் டத்தைச் சீரமைத்தல், மடைப்பள்ளியையும் பாத்திரங்களையும் கழுவுதல், தீபங்களைத் துலக்குதல் முதலான பணிகள் காத்திருந்தன.

மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து ஆலயப் பணிகளில் ஈடுபடத் தொடங்கினர். அகிலனும் நண்பர்களும் பூந்தோட்டத்திற்குச் சென்றனர். புல்லைச் செதுக்கியும், சருகுகளைக் கூட்டியும், பூமரங்களைக் கத்தரித்தும் அழகுபடுத்தினர். அப்போது காற்று சற்றுப் பலமாக வீசியது. வீசிய காற்றில் மரமொன்றிலிருந்த குருவிக் கூட்டிலிருந்து குஞ்சொன்று கீழே வீழ்ந்தது. கீழே விழுந்த குஞ்சும், கூட்டிலிருந்த மற்றொரு குஞ்சும் கத்திக்கொண்டிருந்தன. தாய்க் குருவியும் குஞ்சைச் சுற்றிச்சுற்றி வட்டமிட்டுப் பறந்துகொண்டிருந்தது. மாணவர்கள் அதைக் கண்டனர்.



அகிலன் குஞ்சைக் கையில் எடுத்தான்; அதனைத் மெதுவாகத் தடவினான். அதற்கு நீர் பருக்கினான். மற்றொரு மாணவன் மரத்தில் ஏறி குஞ்சைக் கூட்டில் வைத்தான். எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அந்தவேளை அவ்விடத்திற்கு அதிபர் வந்தார்; ''உயிர்கள் மீது அன்பும் கருணையும் காட்டுவது இறைவழிபாட்டுக்குச் சமனானது'' எனப் பாராட்டினார்.

அப்போது, வெளிவீதியைச் சுத்தம்செய்யச் சென்றிருந்த குமரனும் நண்பர்களும் குரலெழுப்பிச் சத்தமிட்டனர். அனைவரும் அங்கு ஓடிச் சென்றனர். பெரிய மரக்கிளை ஒன்று முறிந்து வீதியின் குறுக்கே வீழ்ந்து

கிடந்தது. ''ஒற்றுமையே பலம். எல்லோரும் சேர்ந்தால் அதனை அப்புறப்படுத்திவிடலாம்'' என்றார் அதிபர்.



எல்லோரும் ஒன்று சேர்ந்து மரக்கிளையை நகர்த்தி ஓரமாக வைத்தனர். வீதியையும் துப்பரவாக்கினர். வேலையை விரைவாக முடித்துவிட்டனர்; ஆனால் களைப்படைந்து விட்டார்கள். அங்கு வந்த அறங்காவலர், தேநீர் அருந்தவருமாறு மாணவர்களை அழைத்தார். எல்லோரும் கை, கால், முகம் கழுவி ஒரு மர நிழலுக்குச் சென்றனர். அங்கு ஆரணி குழுவினர், மடைப்பள்ளி வேலையையும் பூரணி குழுவினர் விளக்குகள் சுத்தம் செய்யும் வேலையையும் முடிந்து விட்டுக் காத்திருந்தனர்.

அப்போது மயூரன் ''பாம்பு, பாம்பு'' என்று கத்தினான். எல்லோரும் அலறியடித்துக் கொண்டு ஆளுக்கொரு திசையில் சிதறி ஓடினர். அதனைக் கண்டு மயூரன் சிரித்தான். ''நான் வேடிக்கைக்காகப் பொய் சொன்னேன்.'' என்றுகூறி மேலும் சிரித்தான். ''வேடிக்கைக்காகவேனும் பொய் சொல்லுதல் கூடாது மயூரன்'' என்று அதிபர் புத்திமதி கூறினார். ''அதுவும் பெரியவர்கள் இருக்குமிடத்தில் இவ்வாறான விளையாட்டெல்லாம் தேவை தானா?'' என்று ஆசிரியர் கேட்டார்.

மயூரன் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்டான். ''மூத்தோரை மதிக்காததும் பொய் சொன்னதும் என் பிழை தான்'' எனக் கூறிக் கண் கலங்கினான். அதிபர் அவனைத் தட்டிக் கொடுத்தார். ''பிழை விடுவது மனித இயல்பு. அதை உணர்ந்து திருந்துவது நன்று. நீ வருந்தாதே'' என்று கூறித் தேற்றினார்.

ஆலயக்குருக்கள், அனைவருக்கும் தேநீரும் சிற்றுண்டியும் வழங்கினார். எல்லோரும் வட்டமாக அமர்ந்து, சிற்றுண்டிகளைப் பகிர்ந்துண்டு மகிழ்ந்தனர். அன்னியோன்னியமாகப் பகிர்ந்துண்டதால் அங்கு மகிழ்ச்சி நிலவியது.

அதிபரும் ஆசிரியர்களும் மாணவர்களும் ஆலயக்குருக்களிடமும் அறங்காவலரிடமும் விடைபெற்றுக் கொண்டனர். அவர்கள் மாணவரை வாழ்த்தி, நன்றி கூறி, விடை கொடுத்தனர். அனைவரும் மகிழ்ச்சியோடு பாட சாலை நோக்கிப் புறப்பட்டனர்.



**நற்பண்புகளைக் கடைப்பிடிப்போம்!**
**நானிலம் போற்ற வாழ்ந்திடுவோம்!**

## பயிற்சி

**தொடர்புபடுத்துவோம்.**

| | |
|---|---|
| 1. அகிலனும் நண்பர்களும் குருவிக் குஞ்சைக் காப்பாற்றியமை. | அ. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. |
| 2. குமரனும் நண்பர்களும் ஒன்று சேர்ந்து வீதியின் குறுக்கே இருந்த மரக் கிளையை அகற்றியமை. | ஆ. பொய் சொன்ன வாய்க்குப் பொரியும் கிடையாது. உண்மை உயர்வு தரும். |
| 3. மயூரன் வேடிக்கைக்காகப் பொய் சொன்னமை. | இ. பகிர்ந்துண்டு வாழ்தல் இன்பம். எள்ளானாலும் ஏழாய்ப் பகிர்ந்து உண். |
| 4. மாணவர்கள் சிற்றுண்டிகளைப் பகிர்ந்து உண்டு மகிழ்ந்தமை. | ஈ. மக்கள் சேவை மகேசன் சேவை. உற்றகாலத்தில் செய்யும் உதவியே உலகில் மிகவும் பெரியது. |
| 5. அதிபர், ஆசிரியர், மாணவர் அனைவரும் ஆலயத் தொண்டு செய்தமை. | உ. உயிர்களிடத்தில் அன்பு வேண்டும். தனது உயிர் போல பிற உயிர்களையும் நேசிக்க வேண்டும். |

## செயற்பாடு

இவ்வுரைப்பகுதிமூலம் நாம் உணர்ந்துகொண்ட நற்பண்புகளைப் பட்டியலிடுவோம்.

# 22 மங்கையர்க்கரசியார்



மங்கையர்க்கரசியார், சைவ சமயத்தில் சிறப்பிடம் பெறும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராவார்.

பாண்டிநாட்டு மன்னனாக விளங்கிய கூன்பாண்டியனின் மனைவியாரான மங்கையர்க்கரசியார், சிவபெருமான்மீது மிகுந்த பக்தி உடையவராக விளங்கினார். ஆனால் மன்னன் கூன்பாண்டியனோ சமணர்களின் போதனையால் சைவத்தை விட்டு நீங்கி சமணசமயத்தைச் சார்ந்திருந்தான். மன்னனது வழியைப் பின்பற்றி மக்களும் சமணத்தைச் சாரத் தொடங்கினர். பாண்டிநாடு திருநீற்றுப் பொலிவினை இழந்தது. கோயில்களில் பூசனை குன்றியது. சைவத்தின் அவலநிலை கண்டு மங்கையர்க்கரசியார் மனம் வருந்தினார்.

பாண்டிய மன்னனின் முதலமைச்சராக குலச்சிறையார் என்பவர் இருந்தார். அவரும் மங்கையர்க்கரசியாரைப் போலவே சிவனிடத்தில் மாறாத பக்தி கொண்டவராய் விளங்கினார். மன்னனதும் மக்களதும் நிலை கண்டு அவரும் மனம் வருந்தினார்.

அக்காலகட்டத்தில் சீர்காழிப்பதியிலே திருஞானசம்பந்தப் பெருமான் ஞானப்பால் உண்டு, சிறுவயதிலேயே தேவாரப்பதிகங்கள் பாடி, அற்புதங்கள் பல நிகழ்த்தி, சைவத்தின் மேன்மையை நிலைநிறுத்திவந்தார். மங்கையர்க் கரசியார் அதனைக் கேள்வியுற்றார். குலச்சிறையாருடன் கலந்தாலோசித்து திருஞானசம்பந்தரை மதுரைக்கு வரச்செய்வதற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டார்.

மங்கையர்க்கரசியாரின் விருப்பத்திற்கு இணங்கி திருஞானசம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளினார். சம்பந்தப் பெருமானை மங்கையர்க்கரசியாரும் முதலமைச்சரும் எதிர்கொண்டு வரவேற்றனர். அச்சமயம் சம்பந்தப் பெருமான் 'மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார். அப்பதிகத்தில் மதுரைத் திருவாலவாய் திருத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனையும் மங்கையர்க்கரசியாரின் திருத் தொண்டையும் சிறப்பித்துப் பாடினார்.

மதுரையில் ஒரு திருமடத்தில் சம்பந்தப் பெருமானும் அவருடன் வந்த அடியார்களும் தங்கியிருந்தனர். சம்பந்தப் பெருமானின் வருகையை விரும்பாத சமணர்கள், அன்று இரவு அந்த மடத்திற்குத் தீ மூட்டினர். மடம் பற்றி எரிந்தது. இறையருளால் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. மாறாக அந்தத் தீயின் வெப்பம் பாண்டிய மன்னனிடம் சென்றடைந்து வெப்புநோயாக அவனை வருத்தியது.

வைத்தியர்கள் பல்வேறு சிகிச்சைகள் செய்தனர். சமண குருமார்கள் மந்திரம் ஓதி மயிற்பீலியால் மன்னனைத் தடவினர். மன்னனின் உடலில் நோய் அதிகரித்ததே அன்றி, குறையவில்லை. அந்த நிலையில் பாண்டிமாதேவியும் குலச்சிறையாரும் மன்னனிடம் திருஞானசம்பந்தப் பெருமானின் சிறப்புக்களை எடுத்துரைத்து ''அவர் வந்தால் நோய் தீரும்'' என்றனர். நோயால் அவதியுற்ற மன்னன் வேறு வழியின்றி அதற்கு உடன்பட்டான். தன் நோய் தீர்ப்பவரின் சமயத்தைச் சார்வதாகவும் கூறினான்.

அரண்மனைக்கு அழைத்துவரப்பட்ட சம்பந்தப் பெருமான் மன்னனின் அருகில் இடப்பட்ட ஆசனத்தில் அமர்ந்தார்; திருவாலவாய்த் திருத்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானைத் தியானித்தார்; திருநீற்றை எடுத்தார்; 'மந்திர மாவது நீறு' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியவண்ணம் மன்னனது உடலெங்கும் திருநீற்றைப் பூசினார்.

மன்னனை வருத்திய வெப்பு நோய் இருந்த இடம் தெரியாது அகன்றது. மன்னன் பெருமகிழ்ச்சி அடைந்தான்; சைவத்தின் பெருமையை உணர்ந்தான்; மீண்டும் சைவனானான். மக்களும் சைவரானார்கள். பாண்டிநாட்டில் மீண்டும் சைவம் தழைத்தோங்கியது. மங்கையர்க்கரசியாரும் மந்திரியாரும் எல்லையில்லா ஆனந்தம் எய்தினார்கள். மங்கையர்க்கரசியாரைச் சிறப்பித்து திருஞானசம்பந்தர் பாடிய தேவாரம் ஒன்று வருமாறு:

திருச்சிற்றம்பலம்

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச்செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாள்தொறும் பரவ
பொங்கழல் உருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே.

திருச்சிற்றம்பலம்

சைவத்தை மீட்ட

மங்கையைப் பணிவோம் !

## பயிற்சி

**தரப்பட்டுள்ள தலைப்புகளின்கீழே உள்ள சொற்றொடர்களுடன் பொருத்தமான வேறு சொற்களையும் சேர்த்து முழுமையான வாக்கியங்களாக்கி எழுதுவோம்.**

**மங்கையர்க்கரசியார்**

1. நாயன்மார்களுள் ஒருவர் -
2. பாண்டியனின் மனைவி -
3. மிகுந்த பக்தி உடையவர் -
4. பதிகத்தில் புகழப்பட்டார் -

**திருஞானசம்பந்தர்**

1. மதுரைக்கு வந்தார் -
2. மந்திரமாவது நீறு தேவாரம் பாடினார் -
3. வெப்பு நோய் தீர்த்தார் -
4. நாட்டில் மீண்டும் சைவம் வளர்ந்தது -

**கூன் பாண்டியன்**

| | | |
|---|---|---|
| 1. | நாட்டின் மன்னன் | - |
| 2. | போதனையால் சமண சமயத்தைத் தழுவினான் | - |
| 3. | மீண்டும் சைவனானான் | - |
| 4. | அமைச்சரின் பெயர் குலச்சிறையார் | - |

**விடை எழுதுவோம்.**

1. சைவத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கு மங்கையர்க்கரசியாருக்கு உறுதுணையாக விளங்கிய அமைச்சர் யார் ?
2. திருஞானசம்பந்தருக்கு சமணர் செய்த தீங்கு யாது ?
3. கூன்பாண்டியனுக்கு சைவத்தின் பெருமையை உணர்த்திய சம்பவம் யாது ?

## செயற்பாடு

'மங்கையர்க்கரசி' எனத் தொடங்கும் தேவாரத்தை பண்ணுடன் ஓதுவோம்.

# 23 நல்வழி

ஔவையார் இயற்றிய நீதி நூல்களுள் **நல்வழி**யும் ஒன்றாகும். அவர் விநாயகக் கடவுளை வழிபட்டுப் பாடிய பாடல் ஒன்றையும் மக்களுக்கு நல்வழிகாட்டிப் பாடிய பாடல்களில் சிலவற்றையும் இங்கு படிப்போம்.



பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்து உனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே ! நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

**பொருள்**

*அழகு செய்கின்றதும் மேன்மையானதுமான யானை முகத்தையுடைய, பரிசுத்தமாகிய இரத்தினம் போன்ற விநாயகக் கடவுளே! அடியேன் உனக்குப் பாலும் தெளிந்த தேனும் வெல்லப் பாகும் பருப்புமாகிய இந் நான்கையும் கலந்து நிவேதிப்பேன். நீ சங்கத்தில் வளர்க்கப்பட்ட (இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும்) தமிழ் மூன்றையும் அடியேனுக்குத் தந்தருள்வாயாக.*

புண்ணியம் ஆம்; பாவம் போம்; போனநாள் செய்த அவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள்; - எண்ணும்கால்
ஈது ஒழிய வேறு இல்லை; எச்சமயத்தோர் சொல்லும்
தீது ஒழிய நன்மை செயல்.

### பொருள்

புண்ணியமே செய்யத் தக்கது. பாவமே ஒழியத்தக்கது. முற்பிறப்பிற் செய்த அந்தப் புண்ணிய பாவங்களே, பூமியிலே பிறந்த மனிதர்களுக்கு (இப் பிறப்பில் இன்ப துன்பங்களை அனுபவித்தற்குக் காரணமாக) வைத்த பொருள்களாகும். ஆராயுமிடத்து எந்தச் சமயத்தார் சொல்வதும் இந்தப் பொருளேயல்லாமல் மற்றொன்றும் இல்லை. (ஆதலினாலே) பாவம் நீங்க, புண்ணியத்தைச் செய்க.

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் வீழுமன்றே - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைக் கண்டீர்!
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

### பொருள்

ஆற்றினது கரையில் இருக்கின்ற மரமும், அரசன் அறிய அதிகாரஞ் செய்து (சம்பாதித்துப்) பெருமையாக வாழ்கின்ற வாழ்க்கையும் அழிந்து போமன்றோ. (ஆதலினாலே) உழுது பயிர் செய்து உண்டு வாழ்வதே உயர்வாகும். அதற்குச் சமானமானது எதுவும் இல்லை. மற்றைத் தொழில் செய்து வாழும் வாழ்க்கைக்கெல்லாம் அழிவு உண்டு.

சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
இதுவே மதியாகும்; அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்.

**பொருள்**

சிவாயநம என்று தியானித்தபடி இருப்பவருக்கு, ஒருநாளும் துன்பம் உண்டாகாது. இதுவொன்றே விதியை வெல்லுவதற்கேற்ற அறிவான உபாயமாம். (இச் சிவத்தியானம்) அல்லாத மற்றைய இடங்களிலெல்லாம் புத்தியானது விதியின் வசத்ததேயாகிவிடும்.

நீறு இல்லா நெற்றி பாழ்; நெய் இல்லா உண்டி பாழ்;
ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்; - மாறில்
உடன்பிறப்பு இல்லா உடம்பு பாழ்; பாழே
மடக்கொடி இல்லா மனை.

## பொருள்

விபூதி இல்லாத நெற்றி சிறப்பற்றதாகும். நெய் இல்லாத உணவு சிறப்பற்றதாகும், ஆறு இல்லாத ஊருக்கு அழகு இல்லை. ஒற்றுமையான சகோதரர்கள் இல்லாத பிறப்பு சிறப்பற்றது. இல்லத்தரசி இல்லாத வீடும் சிறப்பற்றதே.

**அறம் வெல்லும்! பாவம் தோற்கும்!**

## பயிற்சி

**சரியான சொற்களை எழுதி இடைவெளி நிரப்புவோம்.**

மண்ணில், தூமணியே, நீறு, ஆற்றங்கரையின், உழுதுண்டு, சங்கத்தமிழ், உனக்கு, நன்மை, உடன்பிறப்பு, விதியே, அபாயம்

1. துங்கக் கரிமுகத்து ________ நீ எனக்குச் ________ மூன்றும் தா.
2. பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்து ________ நான் தருவேன்.
3. ________ இல்லா நெற்றி பாழ்.
4. ________ பிறந்தார்க்கு வைத்த பொருள்.
5. எச்சமயத்தோர் சொல்லும் தீது ஒழிய ________ செயல்.
6. ________ வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்.
7. இதுவே மதியாகும் அல்லாத எல்லாம் ________ மதியாய் விடும்.
8. சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு ________ ஒரு நாளும் இல்லை.
9. ________ மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் வீழுமன்றே.
10. ________ இல்லா உடம்பு பாழ்.

**விடை எழுதுவோம்**

1. சங்கத் தமிழ் மூன்றும் எவை?

2. நல்வழியை இயற்றியவர் யார்?

3. நமது இன்பதுன்பங்களுக்குக் காரணம் யாது?

4. துங்கக் கரிமுகத்துத் தூமணி யார்?

5. யாருக்கு அபாயம் ஒருநாளும் இல்லை?

## செயற்பாடு

நல்வழிப் பாடல்களை மனனம் செய்து பாடுவோம்.